6

# போதிக்கும் ஊழியம்

இந்த அத்தியாயத்தில் போதிக்கும் ஊழியத்தின் பல அம்சங்களைக் குறித்து நாம் பார்ப்போம். போதிப்பது அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள்,[23] மேய்ப்பர்கள்/மூப்பர்கள்/கண்காணிகள், போதகர்கள் (நிச்சயமாக), மற்றும் நாம் எல்லோருமே சீஷராக்கும்படியும், கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும்படி சீஷர்களுக்குப் போதிக்கும்படியும்[24] அழைக்கப்பட்டிருக்கிறபடியால் கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவருடைய பொறுப்பாகவும் இருக்கிறது.

நான் ஏற்கெனவே வலியுறுத்திக் கூறியபடி, சீஷராக்கும் போதகர் அல்லது ஊழியர் முதலில் தனது முன்மாதிரியின் மூலமாகவும், பிறகு வாய்வார்த்தையின் மூலமாகவும் போதிக்கிறார். தான் செய்கிறவைகளையே அவர் போதிக்கிறார். சீஷர்களை உருவாக்குவதில் வெற்றிகரமாகச் செயல்பட்ட பவுல் அப்போஸ்தலன் இப்படி எழுதியிருக்கிறார்:

> நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் (1 கொரி. 11:1).

இதுவே ஒவ்வொரு ஊழியரின் இலக்காக இருக்க வேண்டும். தம்மால் வழிநடத்தப்படுகிறவர்களிடம் அவர் ''என்னைப்போல நடந்துகொள்ளுங்கள். கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒருவர் எப்படி வாழ்கிறார்

[23] சுவிசேஷகர்களால் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவது ஒருவகைப்பட்ட போதனையின் வடிவம் என்றே கருதப்பட வேண்டும். சுவிசேஷகர்கள் வேதாகம ரீதியாக மிகச் சரியான சுவிசேஷத்தைப் போதிக்க வேண்டும்.

[24] மக்கள் குழுவினருக்குப் பொதுவாகப் போதிக்கும் பொறுப்பு எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் ஒருவருக்கு ஒருவர் அடிப்படையில் போதித்து சீஷராக்கும் பொறுப்பு எல்லோருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது (பார்க்க, மத். 5:19; 28:19–20; கொலோ. 3:16; எபி. 5:12).

என்பதை நீங்கள் அறிய வேண்டுமானால் நீங்கள் என்னைக் கவனித்தால் போதும்'' என்று நேர்மையுடன கூறக்கூடியவராக இருக்க வேண்டும்.

நான் போதகராக ஊழியம் செய்த ஒரு சபையின் உறுப்பினர் களிடம் ''என்னைப் பின்பற்றாதீர்கள், கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள்'' என்று நான் சொன்னது எனக்கு நினைவில் இருக்கிறது. அப்போது அது எனக்குத் தோன்றாவிட்டாலும், நான் பின்பற்றுவதற்குச் சரியான மாதிரி இல்லை என்பதையே ஒப்புக்கொண்டிருக்கிறேன். உண்மையில், கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டிய விதமாக நான் பின்பற்றவில்லை என்பதையே நான் ஒப்புக்கொண்டிருக்கிறேன். நான் செய்யாததை மற்றவர்கள் செய்யும்படி நான் சொல்லியிருக்கிறேன்! பவுல் கூறியதற்கு இது எவ்வளவுதூரம் வேறுபட்டதாக இருக்கிறது! உண்மையில், நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்களும் என்னைப் பின்பற்றுகிற வர்களாயிருங்கள் என்று நம்மால் கூற முடியாவிட்டால், நாம் ஊழியத்தில் இருக்கக்கூடாது. ஏனென்றால் மக்கள் ஊழியர்களையே தங்கள் முன்மாதிரிகளாகக் கருதுகிறார்கள். *சபையானது அதன் தலைவர்களின் பிரதிபலிப்பாக இருக்கிறது.*

### முன்மாதிரியின் மூலமாக ஐக்கியத்தைப் போதித்தல்

முன்மாதிரியின்மூலம் போதித்தல் என்ற இந்தக் கருத்தின் அடிப்படையில் ஐக்கியம் என்பதைக் குறித்து நாம் போதிப்பதாக வைத்துக்கொள்ளலாம். தாங்கள் வழிநடத்தும் மந்தை ஐக்கியப்பட் டிருக்க வேண்டும் என்று எல்லாப் போதகர்களும்/மூப்பர்களும்/ கண்காணிகளும் விரும்புகிறார்கள். பிரிவினையானது ஆண்டவருக்குப் பிரியமில்லாத காரியம் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். தாம் நம்மிடம் அன்புகாட்டியதுபோல, நாமும் மற்றவர்களிடம் அன்புகாட்ட வேண்டும் என்ற கட்டளையை இயேசுவானவர் நமக்குக் கொடுத்திருக் கிறார் [பார்க்க, யோவான் 13:34–35]. நாம் ஒருவர் மற்றவரின்மீது காட்டும் அன்பே நம்மைக் கவனிக்கும் உலகத்துக்கு முன்பாகக் கிறிஸ்துவின் சீஷர்களாக இருக்கிறோம் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. இது இப்படியிருக்கிறபடியால், மந்தையின் பெரும்பாலான தலைவர்கள் தங்கள் ஆடுகள் ஒருவர் மற்றவரிடம் அன்புகாட்ட வேண்டும் என்றும் ஐக்கியத்துக்காக முயல வேண்டும் என்றும் கடிந்து கொள்ளுகிறார்கள்.

நாம் நமது முன்மாதிரியின் மூலமாகவே முக்கியமாகப் போதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் ஊழியர்களாக இருந்தாலும், நாம் எப்படி வாழ்கிறோம் என்பதின் மூலம் அன்பைக் குறித்தும், ஐக்கியத் தைக்குறித்தும் போதிப்பதில் அடிக்கடி குறைவுபடுகிறோம். எடுத்துக் காட்டாக, நாம் மற்றப் போதகர்களோடு அன்பிலும் ஐக்கியத்திலும் குறைவுபடுவோமானால், அது நமது சபையாருக்கு நாம் போதிப்பதற்கு





முரண்பாடான ஒன்றையே அவர்களுக்குக் காட்டுகிறது. நாம் செய்யாததை அவர்கள் செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

*ஐக்கியத்தைக் குறித்து இயேசுவானவர் பேசிய மிக முக்கியமான வார்த்தைகளை அவர் மற்றத் தலைவர்களோடுள்ள ஐக்கியத்தைக் குறித்துத் தலைவர்களிடமே பேசினார்.* எடுத்துக்காட்டாக, கடைசி இராப்போஜனத்தின்போது இயேசுவானவர் தமது சீஷர்களின் கால்களைக் கழுவியபிறகு இப்படிச் சொன்னார்:

> நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் [யோவான் 13:13–15]. [இயேசு முன்மாதிரியின் மூலமாகப் போதித்தார் என்பதைக் கவனியுங்கள்].

போதகர்கள் பெரும்பாலும் தங்கள் மந்தைகளுக்கு ஒருவர் மற்றவர்மீது அன்புகாட்ட வேண்டும் என்பதைப் போதிப்பதற்கு இந்த வேதாகமப் பகுதியைப் பயன்படுத்துவது பொருத்தமானதாகும். ஆனால் இந்தப் பகுதியிலுள்ள வார்த்தைகள் தலைவர்களுக்கு, பன்னிரு அப்போஸ்தலர்களுக்குச் சொல்லப்பட்டவையாகும். தமது தலைவர்கள் பிளவுபட்டிருந்தாலோ அல்லது அவர்கள் ஒருவர் மற்றவரோடு போட்டி போட்டாலோ தமது வருங்காலச் சபை தனது ஊழியத்தில் வெற்றிபெற முடியாது என்பதை இயேசுவானவர் அறிந்திருந்தார். எனவே *தமது தலைவர்கள் தாழ்மையுடன் ஒருவர் மற்றவருக்கு ஊழியம் செய்வதையே எதிர்பார்ப்பதாக* அவர் தெளிவுபடுத்தினார்.

அந்த நாட்களின் கலாச்சாரத்தைப் பார்க்கும்போது, கால்களைக் கழுவுவது என்பது வீட்டிலேயே தாழ்ந்த வேலைக்காரன் செய்யும் வேலையாகும். இயேசுவானவர் இதைச் செய்ததின்மூலம் தாழ்மை யோடு ஊழியம் செய்வதைச் செயல்படுத்திக் காட்டினார். அவர் வரலாற்றில் வேறொரு வேளையில் வேறொரு இடத்துக்குச் சென்றிருப்பாரானால், அவர் கழிவறைகளைத் தோண்டியிருப்பார், அல்லது தமது சீஷர்களின் குப்பைத் தொட்டிகளைக் கழுவியிருப்பார். *அவருடைய நவீன காலத் தலைவர்களில் எத்தனை பேர் ஒருவர் மற்றவர்மீது இப்படிப்பட்ட அன்பையும் தாழ்மையையும் காட்ட ஆயத்தமாக இருக்கிறார்கள்?*

ஒரு மணி நேரத்துக்குள்ளாக இயேசுவானவர் மறுபடியுமாக இந்தச் செய்தியை உறுதிப்படுத்தினார். அவர் அவர்களுடைய கால்களைக் கழுவிச் சில நிமிடங்களுக்குப் பிறகு வருங்காலத்தில் தமது சபை

களுக்குத் தலைவர்களாக இருக்கப்போகிறவர்களிடம் இப்படிக் கூறினார்:

> நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் (யோவான் 13:34–35).

இந்த வார்த்தைகள் கிறிஸ்துவின் எல்லாச் சீஷர்களுக்கும் பொருத்தமானவையாக இருந்தாலும், *துவக்கத்தில் அவை மற்ற தலைவர்களோடுள்ள உறவைக் குறித்துத் தலைவர்களிடம் சொல்லப்பட்டன.*

மறுபடியுமாக, இன்னும் சில நிமிடங்கள் கழித்து இயேசுவானவர் இப்படிக் கூறினார்:

> நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை (யோவான் 15:12–13).

இயேசுவானவர் மறுபடியும் தலைவர்களிடமே பேசுகிறார் என்பதைக் கவனியுங்கள்.

ஒருசில வினாடிகளுக்குள்ளாக, இயேசு மறுபடியுமாக இப்படிக் கூறினார்:

> நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன் (யோவான் 15:17).

மேலும் சில நிமிடங்கள் கழித்து இயேசுவானர் தமது சீஷர்களுக்காக இப்படி ஜெபிப்பதை அவர்கள் கேட்டார்கள்:

> நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல *ஒன்றாயிருக்கும்படிக்கு*, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும் (யோவான் 17:11 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).





இறுதியாக, மேலும் சில நிமிடங்கள் கழித்து இயேசு இப்படி ஜெபிப்பதை அவருடைய சீஷர்கள் கேட்டார்கள்:

> நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் *ஒன்றாயிருக்கவும்*, பிதாவே, *நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக*, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் *ஒன்றாயிருக்கவும்* வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். *ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும்*, நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:20–23 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

இப்படியாக, ஒரு மணி நேரத்துக்குள்ளாக, ஐக்கியமாக இருப்பதின் முக்கியத்துவத்தைக் குறித்து இயேசு தமது வருங்காலத் தலைவர்களுக்கு *ஆறு முறை* வற்புறுத்திக் கூறினார். தாழ்மையுடன் அன்புகாட்டி ஊழியம் செய்வதின்மூலம் ஐக்கியத்தைச் செயல்பூர்வமாகக் காட்டினார். இது இயேசுவுக்கு மிக முக்கியமானதாக இருந்தது என்பது தெளிவாகிறது. உலகம் அவரை விசுவாசிக்கவேண்டுமானால் அவர் களுடைய ஐக்கியம் முக்கியமானதாக இருந்தது.

### நாம் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறோம்?

நமது மந்தையைச் சேர்ந்தவர்கள் அன்பில் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் விரும்பினாலும், நம்மில் பலர் ஒருவர் மற்றவரோடு போட்டிபோடுகிறோம், மற்றவர்களின் சபை பாதிக்கப்பட்டாலும் நமது சபையைக் கட்டியெழுப்புவதற்கு மோசமான வழிமுறைகளைப் பயன்படுத்துகிறோம். கோட்பாட்டில் வேறுபட்ட போதகர்களோடு உறவுவைத்துக்கொள்ளுவதை நம்மில் பெரும்பாலானவர்கள் தவிர்க்கிறோம். நமது சபைக் கட்டிடங்களின் முன்னால் நாம் வைக்கும் விளம்பரப் பலகைகளின் மூலமாக நமது ஐக்கியமின்மயை உலகத்துக்கு விளம்பரப்படுத்துகிறோம்: ‘‘மற்றச் சபைக் கட்டிடங்களிலுள்ள மற்றக் கிறிஸ்தவர்களைப் போல நாங்கள் இல்லை.’’ (நாம் ஐக்கியத்தில் குறைவுபட்டிருக்கிறோம் என்பதை உலகத்துக்குச் சொல்லிக் கொடுப்பதில் நிச்சயமாக வெற்றிபெற்றிருக்கிறோம். எந்தவொரு

அவிசுவாசியும் கிறிஸ்தவ சமயமானது பல்வேறு சபைகளாகப் பிளவுபட்டிருக்கிறது என்பதை அறிவார்.

சுருக்கமாகச் சொல்லுவோமானால், நாம் எதைப் பிரசங்கிக் கிறோமோ, அதைச் செயல்படுத்துவதில்லை. ஐக்கியத்தைக் குறித்த நமது பிரசங்கங்களைவிட நமது முன்மாதிரியே நமது சபைக்கு அதிகமாகப் போதிக்கிறது. தங்கள் தலைவர்கள் பிளவுபட்டிருக்கும்போது சராசரியான கிறிஸ்தவர்கள் ஐக்கியப்பட்டு, ஒருவர் மற்றவர்மீது அன்பு காட்டுவார்கள் என்று எதிர்பார்ப்பது மூடத்தனமாகும்.

மனந்திரும்புதலே இதற்குரிய ஒரே தீர்வாகும். விசுவாசிகளுக்கு முன்பாகவும் உலகத்துக்கு முன்பாகவும் தவறான முன்மாதிரியைக் கொடுத்ததைக் குறித்து நாம் மனந்திரும்ப வேண்டும். நம்மைப் பிளவுபடுத்தும் தடைகளை நாம் அகற்றிவிட்டு, இயேசு கட்டளை யிட்டதுபோல ஒருவர் மற்றவரின்மீது அன்புகாட்ட வேண்டும்.

முதலாவதாக நாம் வெவ்வேறான கோட்பாடுகளைப் பின்பற்றும் போதகர்கள் உட்பட எல்லாப் போதகர்களையும் ஊழியர்களையும் சந்திக்க வேண்டும். மறுபடியும் பிறக்காத, இயேசுவுக்குக் கீழ்ப்படியாத, தனிப்பட்ட ஆதாயத்துக்காக ஊழியத்தில் இருக்கும் ஊழியர்களோடு ஐக்கியப்படுவதை நான் குறிப்பிடவில்லை. அவர்கள் ஆட்டின் தோலைத் தரித்துக்கொண்டிருக்கும் ஓநாய்களாக இருக்கிறார்கள். அவர்களை எப்படி இனம்கண்டுகொள்ளுவது என்று இயேசுவானவர் நமக்குச் சொல்லியிருக்கிறார். அவர்களுடைய கனியினால் நாம் அவர்களை அறிய முடியும்.

இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய முயலுகிறவர்களாக, கிறிஸ்துவுக்குள் மெய்யான சகோதர, சகோதரிகளாக இருப்பவர் களையே நான் குறிப்பிடுகிறேன். நீங்கள் ஒரு போதகராக இருப்பீர் களானால், மற்றப் போதகர்களிடம் அன்புகாட்டும்படி ஒப்படைப்புக் கொண்டிருக்க வேண்டும். உங்கள் மந்தைக்கு முன்பாக அந்த அன்பைச் செயல்பூர்வமாகக் காட்ட வேண்டும். இதற்கு ஒரு வழி உங்கள் பகுதியிலுள்ள போதகர்களிடம் சென்று, நீங்கள் அன்புகாட்ட வேண்டியபடி அவர்களிடம் அன்புகாட்டாததற்காக அவர்களுடைய மன்னிப்பை வேண்ட வேண்டும். இது தடைச் சுவர்களில் சிலவற்றைத் தகர்த்துப்போடும். பிறகு, சேர்ந்து உணவருந்தவும், ஒருவர் மற்றவரை ஊக்குவிக்கவும், ஜெபிக்கவும் ஒழுங்காகக் கூடிவரும்படி தீர்மானி யுங்கள். இப்படிப்பட்ட வேளைகளில் உங்களிடையே பிரிவினையை உண்டாக்கக்கூடிய கோட்பாட்டு வேறுபாடுகளைக் குறித்து அன்போடு விவாதிக்கலாம். நீங்கள் உங்கள் விவாதத்தின் முடிவில் ஒத்த கருத்தைக் கொண்டிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் ஐக்கியத் தைக் காத்துக்கொள்ளும்படி ஒப்படைப்புக் கொள்ள வேண்டும். எனது கோட்பாட்டுக்கு வேறுபட்ட ஊழியர்களுக்கும் செவிகொடுக்கும்படி





திறந்து கொடுத்தபிறகுதான் என்னுடைய வாழ்க்கையும் ஊழியமும் வளமாகியது. பல ஆண்டுகளாக என்னை நானே அடைத்துக் கொண்டி ருந்தபடியால் அநேக ஆசீர்வாதங்களை இழந்து போயிருந்தேன்.

உங்கள் சபையிலோ அல்லது வீட்டுச் சபைக் கூடுகையிலோ பிரசங்கம்செய்யும்படி மற்றப் போதகர்களை அழைப்பதின்மூலம் நீங்கள் உங்கள் அன்பையும் ஐக்கியத்தையும் செயல்பூர்வமாகக் காட்ட முடியும். அல்லது உங்கள் சபையானது மற்றச் சபைகளோடு அல்லது வீட்டுச் சபைகளோடு சேர்ந்து கூட்டங்களை நடத்தலாம்.

கிறிஸ்துவின் சரீரத்தில் எஞ்சியிருப்பவர்களோடு நீங்கள் ஐக்கிய மாக இல்லை என்பதைக் காட்டும் உங்கள் சபையின் பெயரை நீங்கள் மாற்றலாம். உங்கள் சபைப்பிரிவை விட்டோ அல்லது பெயர் கொடுக்கும் தொடர்புகளைவிட்டோ வெளியே வந்து, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையோடு மட்டும் ஐக்கியப்படலாம். இயேசுவானவர் ஒன்றோடொன்று ஒத்துப் போகாத பல சபைகளை அல்ல, ஒரே சபையையே கட்டியெழுப்புகிறார் என்ற செய்தியை உலகத்துக்கு அறிவிக்கலாம்.

இது புரட்சிகரமானது என்பதை நான் அறிவேன். இயேசுவானவர் ஒருபோதும் நோக்கம் கொண்டிராத ஒன்றுக்கு நாம் ஏன் ஆதரவளிக்க வேண்டும்? அவருக்குப் பிரியமில்லாத ஒன்றோடு நாம் ஏன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்? வேதாகமத்தில் எந்தச் சபைப் பிரிவைக் குறித்தோ அல்லது சிறப்பான கூட்டுக் கழகங்களைக் குறித்தோ குறிப்பிடப்படவில்லை. தங்களுக்குப் பிடித்த பிரசங்கியார் என்பதைக் குறித்துக் கொரிந்தியர்கள் பிளவுபட்டபோது, பவுல் அவர்களை உறுதியாகக் கடிந்துகொண்டார். அவர்களுடைய பிரிவினைகள் அவர்களுடைய மாம்சத் தன்மையையும், அவர்கள் இன்னும் ஆவிக்குரிய குழந்தைகளாகவே இருக்கிறார்கள் என்பதையுமே வெளிப்படுத்துகின்றன என்று அவர் கூறினார் (பார்க்க, 1 கொரி. 3:1–7). நமது பிரிவினைகள் இதற்குக் குறைவாக எதையாவது வெளிப்படுத்துகின்றனவா?

மற்றவர்களிடமிருந்து நம்மைப் பிரிக்கும் எதையும் ஒதுக்கித் தள்ள வேண்டும். வீட்டுச் சபைகள் தங்களுக்குப் பெயர்களைக் கொடுத்துக் கொள்ளக் கூடாது, பெயர்களைக் கொண்ட கூட்டமைப்பில் சேரக் கூடாது. வேதாகமத்தில், தனிப்பட்ட வீட்டுச் சபைகள் அவை யாருடைய வீட்டில் கூடிவந்ததோ அவர்களுடைய பெயரைக் கொண்டே குறிப்பிடப்பட்டன. ஒரு பட்டணத்திலுள்ள சபைகள் அந்தப் பட்டணத்தின் பெயரைக் கொண்டே குறிப்பிடப்பட்டன. அவர்கள் தாங்கள் ஒரே சபையின், கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாகவே இருக்கிறோம் என்ற உணர்வைப் பெற்றிருந்தார்கள்.

ஒரு ராஜாவும் ஒரு ராஜ்யமும் மட்டுமே உண்டு. *விசுவாசிகளோ அல்லது சபைகளோ எந்தவொரு தனிப்பட்டவரின் பெயரைக் கொண்டு குறிப்பிடப்பட்டால், அவர் தேவனுடைய ராஜ்யத்துக்குள்ளாகத் தனது சொந்த ராஜ்யத்தையே கட்ட முயலுகிறார் என்பதுதான் அர்த்தமாகும்.* ''என் மகிமையை நான் வேறொருவருக்குங் கொடேன்'' என்று சொல்லும் [ஏசாயா 48:11] ராஜாவைச் சந்திக்க அவர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

ஊழியர்கள் எல்லோருக்கும் முன்பாகக் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதில் சரியான முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டவே இவையெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் மக்கள் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றப் போகிறார்கள். மற்றவர்களுக்கு முன்பாக அவர்கள் எப்படிப்பட்ட முன்மாதிரியாக வாழ்கிறார்களோ அதுவே அதிக தாக்கம் விளைவிக்கும் அவர்களுடைய போதனையாக இருக்கிறது. பிலிப்பியைச் சேர்ந்த விசுவாசிகளுக்குப் பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:

> சகோதரரே, *நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிற வர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்* [பிலி. 3:17 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

## எதைப் போதிக்க வேண்டும்

பவுலைப்போலவே சீஷர்களை உருவாக்கும் ஊழியர் ஒரு இலக்கைக் கொண்டிருக்கிறார். ''எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக'' நிறுத்துவதே அந்த இலக்காகும் [கொலோ. 1:28அ]. எனவே பவுலைப்போலவே நாமும் ''*எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி*, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் *உபதேசம் பண்ண*'' வேண்டும் [கொலோ. 1:28ஆ அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. மக்களை அறிவுள்ளவர்களாக்கவோ அல்லது மகிழ்வூட்டவோ பவுல் போதிக்கவில்லை என்பதைக் கவனியுங்கள்.

சீஷர்களை உருவாக்கும் ஊழியர் பவுலோடுகூடச் சேர்ந்து, ''சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே'' எங்கள் இலக்கு என்று சொல்ல முடியும் [1 தீமோ. 1:5]. அதாவது, தாம் ஊழியம் செய்யும் மக்களின் வாழ்க்கையில் கிறிஸ்துவின் மெய்யான சாயலையும், பரிசுத்தத்தையும் உருவாக்க அவர் விரும்புகிறார். எனவேதான் கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர் விசுவாசிகளுக்குப் போதிக்கிறார். அவர் சத்தியத்தைப் போதித்து, ''யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்;





பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே'' என்பதை வலியுறுத்துகிறார் [எபி. 12:14].

இயேசுவானவர் தமது சீஷர்களிடம் தாம் அவர்களுக்குக் கட்டளையிட்டவைகளில் சிலவற்றுக்கு அல்ல, எல்லாவற்றுக்கும் கீழ்ப்படிய வேண்டுமென்று அவர்கள் தங்கள் சீஷர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார் என்பதைச் சீஷர்களை உருவாக்கும் ஊழியர் அறிந்திருக்கிறார் [பார்க்க, மத். 28:19–20]. கிறிஸ்து கட்டளையிட்ட எதையும் புறக்கணிக்காமலிருப்பதை அவர் உறுதிப்படுத்திக் கொள்ளுகிறார். எனவே அவர் ஒழுங்காகச் சுவிசேஷத்தையும், நிருபங்களையும் வசனம் வசனமாகப் போதிக்கிறார். இங்கேதான் இயேசுவின் கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, மறுபடியுமாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட விளக்கப் போதனை அவருடைய போதனை சமநிலையோடு இருக்கும்படியும் காத்துக்கொள்ளுகிறது. நாம் ஒரு தலைப்பின் அடிப்படையிலான செய்திகளை மட்டும் பிரசங்கிக்கும் போது, மக்களுக்குப் பிரபலமான தலைப்புகளையே தெரிந்து கொள்ளுகிறோம். அதிகப் பிரபலமாக இல்லாத தலைப்புகளைப் புறக்கணிக்கவே தலைப்படுகிறோம். ஆனால் வசனம் வசனமாகப் பிரசங்கிப்பவரோ தேவனுடைய அன்பைக்குறித்து மட்டுமே போதிக்காமல் அவருடைய சிட்சை மற்றும் கோபாக்கினையைக் குறித்தும் போதிக்கிறார். அவர் ஒரு கிறிஸ்தவனாக இருப்பதிலுள்ள ஆசீர்வாதங்களைக்குறித்து மட்டுமல்ல, பொறுப்புகளைக் குறித்தும் போதிப்பார். அவர் முக்கியத்துவம் குறைவானதை வலியுறுத்தி, அதிக முக்கியமானதைப் புறக்கணிக்க மாட்டார். [இயேசுவானவர் சுட்டிக் காட்டுகிறபடி இதுவே பரிசேயர்களின் குற்றமாக இருந்தது, பார்க்க, மத். 23:23–24].

## விளக்கப்போதனை குறித்த பயத்தை மேற்கொள்ளுதல்

வேதாகமத்தில் தாங்கள் புரிந்துகொள்ளாத காரியங்கள் அதிகமாக இருக்கிறபடியால் பல போதகர்கள் ஒவ்வொரு வசனமாகப் போதிப்பதற்குப் பயப்படுகிறார்கள். தங்களுக்கு எவ்வளவாகத் தெரியவில்லை என்பதைச் சபையார் தெரிந்துகொள்ளுவதை அவர்கள் விரும்புவதில்லை! இது உண்மையில் பெருமையை அடிப்படையாகக் கொண்டதாகும். வேதாகமத்தைப் பரிபூரணமாகப் புரிந்துகொண்டவர் எவரும் உலகத்தில் இல்லை. பவுல் எழுதிய காரியங்களில் சிலவற்றைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று பேதுருகூடச் சொல்லியிருக்கிறார் [பார்க்க, 2 பேதுரு 3:16].

வசனம் வசனமாகப் போதிக்கும் ஒரு போதகர் தனக்குப் புரியாத ஒரு வசனத்தையோ அல்லது பகுதியையோ எட்டும்போது, அடுத்த

பகுதி தனக்குப் புரியவில்லை என்று சொல்லி, அதற்கு அடுத்த பகுதிக்குச் செல்ல வேண்டும். அதே வேளையில் பரிசுத்த ஆவியானவர் புரிந்துகொள்ள உதவ வேண்டுமென்று ஜெபிக்கத் தனது மந்தையை ஊக்குவிக்க வேண்டும். அவருடைய தாழ்மை அவருடைய மந்தைக்கு முன்பாக நல்ல முன்மாதிரியாக இருக்கும். இது தன்னில்தானே ஒரு பிரசங்கமாக இருக்கும்.

ஒரு வீட்டுச்சபையின் போதகர்/மூப்பர்/கண்காணிகள் ஒரு முறைப்படி அமையாத சூழலில் போதிப்பதற்குக் கூடுதலான சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஏனென்றால் அவருடைய போதனையின்போது கேள்விகள் கேட்கப்படலாம். இது ஆய்வு செய்யப்படும் வேதவசனங்களைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவர் மற்றவர்களுக்கு உள்ளறிவைக் கொடுப்பதற்கான சாத்தியக் கூறையும் அளிக்கிறது. இதனால் எல்லோரும் இன்னும் சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடியும்.

கிறிஸ்துவின் கட்டளைகளைக் குறித்துப் போதிக்கும்போது, மத்தேயு 5–7 அதிகாரங்களில் காணப்படும் மலைப்பிரசங்கத்தைக் கொண்டு துவங்குவது நல்லதாகும். இங்கே இயேசுவானவர் பல கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார். அவரைப் பின்பற்றிய யூதர்கள் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தை நன்றாகப் புரிந்துகொள்ளும்படி செய்திருக்கிறார். இந்தப் புத்தகத்தின் பின்னொரு அத்தியாயத்தில் மலைப்பிரசங்கத்தை எப்படிப் போதிப்பது என்பதை வசனம் வசனமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

### பிரசங்கத்தை ஆயத்தம்செய்தல்

எந்தவொரு போதகர்/மூப்பர்/கண்காணியோ ஒரு வாராந்திர பிரசங்கத்தை குறிப்புகள் மற்றும் எடுத்துக்காட்டுகளோடு தயாரித்தார் என்பதற்குப் புதிய ஏற்பாட்டில் எந்தவித நிரூபணமும் இல்லை. இன்று பல போதகர்கள் சுருக்கக் குறிப்புகளோடு கூட பிரசங்கத்தை முழுவதுமாக ஆயத்தம்செய்கிறார்கள். இயேசுவானவர் இப்படி ஒரு காரியத்தைச் செய்வதை நம்மில் எவரும் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது அல்லவா? துவக்ககாலச் சபையில் தன்னிச்சையான போதனை கொடுக்கப்பட்டது. யூத வழக்கத்தைப் பின்பற்றி அது ஒருவரோடொருவர் இடைபடுதலைக் கொண்டிருந்தது. கிரேக்கர்களும் ரோமர்களும் மட்டுமே சொற்பொழிவு முறையைப் பின்பற்றினார்கள். சபை அமைப்புச் சார்ந்ததாக மாறியபோது அவர்கள் இந்த கிரேக்கப் பாரம்பரியத்தைப் பின்பற்றத் துவங்கினார்கள். தமது சீஷர்கள் விசாரணைக்கு அழைக்கப்படும்போது அவர்கள் என்ன பேச வேண்டும் என்பதை ஆயத்தம் செய்ய வேண்டாம், பரிசுத்த ஆவியானவரே பேசுவதற்கான வார்த்தைகளைக் கொடுப்பார் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கும்போது, சபைக் கூடுகைகலில் தேவன் போதகர்





களுக்கு உதவுவார் என்பதை நிச்சயமாக எதிர்பார்க்க முடியும் அல்லவா?

ஆனால் ஊழியர்கள் ஜெபிப்பதின்மூலமாகவும் ஆய்வுசெய்வதின் மூலமாகவும் *தங்களை* ஆயத்தம் செய்துகொள்ள வேண்டும். பவுல் தீமோத்தேயுவிடம் இப்படிச் சொல்லியிருக்கிறார்:

> நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு [2 தீமோ. 2:15].

''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக'' [கொலோ. 3:16] என்ற பவுலின் ஆலோசனையைப் பின்பற்றும் ஊழியர்கள் தேவனுடைய வார்த்தை யினால் நிறைந்திருப்பார்கள், அதைக் கொண்டு அவர்களால் போதிக்க முடியும். எனவே அன்பான போதகரே, நீங்கள் வேதாகமத்தில் உங்களை நீங்களே மூழ்கச் செய்ய வேண்டியதே முக்கியமான காரியமாகும். நீங்கள் உங்கள் தலைப்புப் பொருளைக்குறித்த அறிவையும் உணர்வையும் பெற்றிருப்பீர்களானால், தேவனுடைய சத்தியத்தை அறிவிக்க வேறு எந்த ஆயத்தமும் தேவையில்லை. மேலும், நீங்கள் வசனம் வசனமாகப் போதிப்பீர்களானால் ஒவ்வொரு இரண்டாம் வசனத்தையும் சுருக்கக் குறிப்பாகப் பயன்படுத்தலாம். நீங்கள் போதிக்கப்போகும் வசனங்களை ஜெபத்தோடு தியானிப்பதே உங்களுக்குரிய ஆயத்தமாக இருக்கும். நீங்கள் ஒரு வீட்டுச்சபையில் போதிப்பீர்களானால் கலந்துரையாடல் வழிமுறையில் போதிப்பதால் சுருக்கக் குறிப்புகளுக்குத் தேவை இருக்காது.

தான் போதிக்கும்போது தேவன் தனக்கு உதவுவார் என்ற விசுவாசத்தை ஒரு ஊழியர் பெற்றிருப்பாரானால், அவர் நிச்சயமாகத் தேவனுடைய உதவியைப் பெறுவார். எனவே உங்கள்மீதும், உங்கள் ஆயத்தத்தின்மீதும், உங்கள் குறிப்புகளின்மீதும் குறைவான நம்பிக்கை வைத்து, ஆண்டவரின்மீது அதிகமான நம்பிக்கை வையுங்கள். படிப்படியாக, நீங்கள் விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் வளரும்போது, குறைவான குறிப்புகளைத் தயாரிப்பீர்கள், இறுதியில் குறிப்புகள் இல்லாமலே பிரசங்கம் செய்யும் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

மற்றவர்களுக்கு முன்பாகச் சுய உணர்வுடையவராக இருக்கும் ஒருவர் ஆயத்தம் செய்யப்பட்ட குறிப்புகளைச் சார்ந்திருப்பார்; ஏனென்றால் பொதுவான இடத்தில் தவறு செய்வதைக் குறித்து அவர் பயப்படுகிறார். அவருடைய பயம் பாதுகாப்பின்மையிலும், அது பெருமையிலும் வேர்கொண்டிருக்கிறது என்பதை அவர் உணர வேண்டும். மற்றவர்களின் பார்வையில் தான் எவ்வாறு

தோற்றமளிக்கிறோம் என்பதைவிடத் தானும் தனது சபையாரும் எப்படித் தேவனுடைய பார்வையில் இருக்கிறோம் என்பதைக் குறித்தே அவர் அதிகக் கரிசனைகொள்ள வேண்டும். இருதயத்தில் உணரப்பட்ட, ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்ற போதனையைவிட ஆயத்தம் செய்யப்பட்ட எந்தப் பிரசங்கமும் கேட்பவர்களை அதிகமாக அசைக்க முடியாது. எல்லோருமே தங்கள் உரையாடல்களுக்காகக் குறிப்புகளைப் பயன்படுத்துவார்கள் என்றால் அது தொடர்புகொள்ளுவதற்கு எப்படிப்பட்ட இடையூறாக இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். உரையாடலே மடிந்துபோகும்! ஆயத்தம் செய்யப்பட்ட சொற்பொழிவை விட, ஒத்திகை பார்க்கப்படாத ஒரு உரையாடல் வழிமுறை அதிக உண்மையுள்ளதாக இருக்கிறது. போதிப்பது என்பது நடிப்பது அல்ல. அது சத்தியத்தை எடுத்துச் சொல்லுவதாகும். நாம் கேட்டுக்கொண்டிருப் பது ஒரு சொற்பொழிவு என்பதை நம்மால் உணர முடிகிறது. அப்படிப் பட்ட வேளைகளில் உடனடியாக அதைக் கவனிக்காதிருக்கும்படியே நாம் தூண்டப்படுகிறோம்.

## நான்கு கூடுதலான சிந்தனைகள்

(1) சில ஊழியர்கள் கிளிகளைப்போல இருக்கிறார்கள். தங்கள் பிரசங்கத்துக்குத் தேவையான குறிப்புகள் எல்லாவற்றையும் அவர்கள் மற்றவர்கள் எழுதிய புத்தகங்களிலிருந்தே எடுக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரால் தனிப்பட்ட முறையில் போதிக்கப்படுவதில் கிடைக்கும் அற்புதமான ஆசீர்வாதங்களை அவர்கள் இழந்துபோகிறார்கள். அவர்கள் யாருடைய கருத்தைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுடைய தவறு களைத் தானும் பின்பற்றுகிறார்கள்.

(2) பல போதகர்கள் மற்றப் பிரசங்கிமார்களின் போதிக்கும் நடையைப் பின்பற்றுகிறார்கள். இந்த நடைகள் பெரும்பாலும் பாரம்பரிய மானவையாகும். எடுத்துக்காட்டாக, சில வட்டாரங்களில் பிரசங்கங்கள் அபிஷேகம் பெற்றவையாக இருக்குமானால் அவை உரத்த குரலில் வேகமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று நம்பப்படுகிறது. எனவே சபைக்கு வருபவர்கள் துவக்கத்திலிருந்து இறுதி வரையில் உரத்த குரலுக்குச் செவிகொடுக்க வேண்டியிருக்கிறது. ஏற்றமும் இறக்கமும் இல்லாமல் பேசும்போது மக்கள் கவனிப்பதை விட்டுவிடுவதுபோலவே, உரத்த குரலில் பேசும்போதும் கவனிப்பதை விட்டுவிடுகிறார்கள். குரலில் ஏற்ற இறக்கமே கவனத்தை ஈர்க்கும். மேலும் *பிரசங்கம்* என்பது விளக்கப் போதனை என்பதால் இயல்பாகவே சற்று உரத்த குரலில் கொடுக்கப்படுகிறது. ஆனால் *போதிப்பது* என்பது கற்பிக்கிறபடியால் அது உரையாடல் தொனியில் கொடுக்கப்படுகிறது.

(3) நூற்றுக்கணக்கான சபை ஆராதனைகளில் பிரசங்கங்களுக் குச் செவிகொடுப்பவர்களை நான் கவனித்திருக்கிறேன். மக்கள் சோர்வடைந்திருக்கிறார்கள் அல்லது கவனிக்கவில்லை என்று சுட்டிக்





காட்டப்படுவதைக் குறித்த உணர்வில்லாமல் பல போதகர்களும் உபதேசியார்களும் இருப்பது எனக்கு வியப்பைத் தருகிறது. போதகரே, சோர்ந்துபோனதுபோலக் காட்சியளிக்கும் மக்கள் *நிச்சயமாகவே* சோர்ந்து போயிருக்கிறார்கள்! நீங்கள் பேசும்போது உங்களை நோக்கிப் பார்க்காத வர்கள் ஒருவேளை கவனிக்காமலிருக்கலாம். செவிகொடுக்காத மக்கள் எந்த உதவியையும் பெற முடியாது. *உண்மையுள்ள* மக்கள் சோர்வடைந் தாலோ அல்லது கவனிக்காமலிருந்தாலோ நீங்கள் உங்கள் பிரசங்கிக்கும் முறையை மேம்படுத்த வேண்டும். அதிகமான எடுத்துக் காட்டுக் கதைகளைக் கொடுங்கள். பொருத்தமான கதைகளைச் சொல்லுங்கள். உவமைக் கதைகளைச் சொல்லுங்கள். எளிமையாகப் போதியுங்கள். உங்கள் இருதயத்திலிருந்து தேவனுடைய வார்த்தை யைப் போதியுங்கள். உண்மையாக நீங்கள் நீங்களாகவே இருங்கள். உங்கள் குரலில் ஏற்ற இறக்கத்தைக் காட்டுங்கள். கூடுமானவரையில் கேட்பவர்களில் பலரோடு கண்தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். முகத்தில் உணர்வுகளை வெளிப்படுத்துங்கள். உங்கள் கைகளைப் பயன்படுத்துங்கள். அங்குமிங்கும் நடந்து செல்லுங்கள். அளவுக்கு அதிகமான நேரம் பேசாதிருங்கள். குழு சிறியதாக இருக்குமானால், பொருத்தமான நேரத்தில் மக்கள் கேள்விகளைக் கேட்பதற்கு அனுமதி யுங்கள்.

(4) ஒவ்வொரு பிரசங்கமும் மூன்று குறிப்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது மானிடக் கண்டுபிடிப்பாகும். நவீன பிரசங்கவியல் கொள்கைகளைப் பின்பற்றுவது அல்ல, சீஷர்களை உருவாக்குவதே இலக்காக இருக்க வேண்டும். ‘‘என் ஆடுகளை மேய்ப்பாயாக’’ என்றுதான் இயேசுவானவர் சொல்லியிருக்கிறார், ‘‘என் ஆடுகளிடம் உன் திறமையைக் காட்டு’’ என்று அவர் சொல்லவில்லை!

## யாருக்குப் போதிக்க வேண்டும்

இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி, சீஷர்களை உருவாக்கும் ஊழியர் தான் *யாருக்குப்* போதிக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இது உங்களுக்கு வியப்பளித்தாலும், இதுவே உண்மை யாகும். இயேசுவானவர் அடிக்கடி திரளான மக்களுக்கு *உவமை களினால்* போதித்தார், இதற்குக் காரணம் இருக்கிறது. தாம் சொல்லுவதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்பவில்லை. வேதவசனத்திலிருந்து இதைத் தெளிவாக அறிகிறோம்:

> அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ

> அருளப்படவில்லை. உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும். அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன் [மத். 13:10–13].

மனந்திரும்பி, கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களுக்கு மட்டுமே கிறிஸ்துவின் உவமைக்கதைகளைப் புரிந்துகொள்ளும் சிலாக்கியம் கொடுக்கப்படுகிறது. மனந்திரும்புவதற்கான வாய்ப்பை உதறித்தள்ளி, தங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தத்தை எதிர்த்துநிற்பவர்களைத் தேவனும் எதிர்த்து நிற்கிறார். தேவன் பெருமையுள்ளவர்களை எதிர்த்து நிற்கிறார், ஆனால் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அருளுகிறார் [பார்க்க, 1 பேதுரு 5:5].

இதைப்போலவே இயேசுவானவர் தம்மைப் பின்பற்றியவர்களுக்கு இந்தப் போதனையைக் கொடுத்தார்: ‘‘பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்’’ [மத். 7:6]. இயேசு உருவகமாகப் பேசுகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. ‘‘மதிப்பை ஒப்புக்கொள்ளாதவர்களிடம் மதிப்புள்ள காரியங்களைக் கொடாதீர்கள்’’ என்பதே அவர் கூறியதின் அர்த்தமாகும். பன்றிகள் முத்துக்கள் விலைமதிப்பற்றவை என்பதை உணராதிருப்பதுபோல, ஆவிக்குரிய பன்றிகள் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது அதன் மதிப்பை உணருவதில்லை. தாங்கள் கேட்பது தேவனுடைய வார்த்தை என்று மெய்யாகவே அவர்கள் விசுவாசிப்பார்களானால், அவர்கள் அதைக் கூர்ந்து கவனித்து, அதற்குக் கீழ்ப்படிவார்கள்.

ஒருவர் ஆவிக்குரிய பன்றியாக இருக்கிறார் என்பதை நீங்கள் எப்படி அறிய முடியும்? ஒரு முத்தை அவருடைய பாதையில் போட்டு, அவர் அதை என்ன செய்கிறார் என்பதைப் பாருங்கள். அவர் அதைப் புறக்கணித்தால் அவர் ஆவிக்குரிய பன்றி என்பதை அறிந்துகொள்ளுவீர்கள். அவர் அதற்குக் கீழ்ப்படிவாரானால், அவர் ஆவிக்குரிய பன்றி அல்ல என்பதை அறிந்துகொள்ளுவீர்கள்.

இயேசுவானவர் செய்ய வேண்டாம் என்று கூறிய காரியத்தையே அநேக போதகர்கள் செய்துவருவது சோகமான காரியமாகும். அவர்கள் தொடர்ந்து பன்றிகளுக்கு முன்பாகத் தங்கள் முத்துக்களைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையை எதிர்க்கும் அல்லது புறக்கணிக்கும் மக்களுக்குப் போதித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த





ஊழியர்கள் தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தை வீணாக்குகிறார்கள். இயேசுவானவர் கட்டளையிட்டபடியே அவர்கள் நீண்டகாலத்துக்கு முன்பாகவே தங்கள் கால்களிலுள்ள தூசை உதறிவிட்டு நகர்ந்துசென்றிருக்க வேண்டும்.

## செம்மறியாடுகள், வெள்ளாடுகள், பன்றிகள்

சீஷராக்கப்பட விரும்பாத ஒருவரை, இயேசுவுக்குக் கீழ்ப்படிய விரும்பாத ஒருவரை உங்களால் சீஷராக்க முடியாது. பல சபைகளில் இப்படிப்பட்ட மக்களே அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் கலாச்சாரக் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். இயேசுவைக் குறித்தோ அல்லது கிறிஸ்தவ சமயத்தைக் குறித்தோ தாங்கள் சில இறையியல் உண்மைகளை ஒப்புக்கொண்டிருக்கிறபடியால், தாங்கள் மறுபடியும் பிறந்திருப்பதாக அவர்கள் நினைத்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் செம்மறியாடுகள் அல்ல, வெள்ளாடுகளாகவும் பன்றிகளாகவும் இருக்கிறார்கள். என்றாலும் பல போதகர்கள் தங்கள் நேரத்தில் 90 சதவீதத்தை இந்த வெள்ளாடுகளையும், பன்றிகளையும் பராமரிப்பதில் செலவிடுகிறார்கள். இதே வேளையில் அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக ஊழியம் செய்ய வேண்டிய செம்மறியாடுகளைப் புறக்கணிக்கிறார்கள்! போதகரே, இயேசுவானவர் நீங்கள் தமது *ஆடுகளை* மேய்க்க வேண்டும் என்றே விரும்புகிறார், வெள்ளாடுகளையும், பன்றிகளையும் அல்ல [பார்க்க, யோவான் 21:17].

ஆனால் யார் செம்மறியாடுகள் என்பதை நீங்கள் எப்படி அறிய முடியும்? அவர்களே சபைக்கு முன்னதாக வந்து பின்னால் வெளியே செல்லுபவர்கள். இயேசுவானவர் அவர்களுடைய ஆண்டவராக இருக்கிறபடியாலும், அவர்கள் அவரைப் பிரியப்படுத்த விரும்புகிறபடியாலும் சத்தியத்தை அறியப் பசிதாகம் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் சபைக்கு வருவதில்லை, சபை கூடிவரும்போதெல்லாம் வருகிறார்கள். சிறுகுழுக்களில் அவர்கள் ஈடுபாடுகொள்ளுகிறார்கள். அவர்கள் அடிக்கடி கேள்விகளைக் கேட்கிறார்கள். ஆண்டவரைக்குறித்து உற்சாகம் கொண்டிருக்கும் அவர்கள் ஊழியம் செய்வதற்கான வாய்ப்புக்களைத் தேடுகிறார்கள்.

போதகரே, இந்த மக்களுக்காக உங்களுடைய பெரும்பாலான நேரத்தையும் கவனிப்பையும் செலவிடுங்கள். இவர்களே சீஷர்களாவர். உங்களுடைய சபைக்கு வரும் வெள்ளாடுகளுக்கும், பன்றிகளுக்கும் அவர்கள் தாங்கிக்கொள்ளும் வரைக்குச் சுவிசேஷத்தை அறிவியுங்கள். நீங்கள் மெய்யான சுவிசேஷத்தை அறிவிப்பீர்களானால், அவர்களால் நீண்ட காலம் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது. அவர்கள் சபையை விட்டுச் செல்லுவார்கள். அல்லது அவர்களுக்கு அதிகாரம் இருக்குமானால், உங்களைப் பதவியிலிருந்து விலக்க முயலுவார்கள். அவர்கள் வெற்றிபெறுவார்களானால், உங்கள் காலில் படிந்திருக்கும் தூசை

உதறிவிட்டு வெளியேறுங்கள். [ஒரு வீட்டுச் சபைப் பின்னணியில் இப்படிப்பட்ட காரியம் நடக்க முடியாது, குறிப்பாக *உங்கள்* வீட்டில் சபை கூடிவருமானால்!]

இதைப்போலவே, தொடர்ந்து சுவிசேஷத்தைப் புறக்கணிக்கும் மக்களுக்குத் தாங்கள் சுவிசேஷத்தைப் போதிக்கும் கடமையைப் பெற்றிருப்பதாகச் சுவிசேஷகர்கள் நினைத்துக்கொள்ளக் கூடாது. மரித்தவர்கள் மரித்துப்போனவர்களை அடக்கம்பண்ணும்படி விட்டு விடுங்கள் [பார்க்க, லூக்கா 9:60]. நீங்கள் கிறிஸ்துவின் ஸ்தானாபதியாக ராஜாதிராஜாவின் மிக முக்கியமான செய்தியைக் கொண்டு செல்லுகிறீர்கள். தேவனுடைய ராஜ்யத்தில் உங்கள் இடம் மிக மேன்மையானதாகவும், உங்கள் பொறுப்பு மிக அதிகமானதாகவும் இருக்கிறது. எல்லோரும் சுவிசேஷத்தை ஒரு முறையாவது கேட்கும் வரையில் எவருக்கும் சுவிசேஷத்தை இரண்டு முறை போதிக்காதிருங்கள்.

நீங்கள் சீஷர்களை உருவாக்கும் ஊழியராக இருக்க வேண்டுமானால், யாருக்குப் போதிக்கிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இயேசுவுக்குக் கீழ்ப்படிய விரும்பாத மக்களுக்காக உங்கள் நேரத்தை வீணாக்கக்கூடாது. பவுல் தீமோத்தேயுவுக்கு இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை, மற்றவர்களுக்குப்போதிக்கத்தக்க *உண்மையுள்ள* மனுஷர்களிடத்தில் ஒப்புவி [2 தீமோ. 2:2 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

## இலக்கை எட்டுதல்

இயேசுவானவரின் ஊழியத்தில் ஒருபோதும் நடக்காத, ஆனால் இப்போதைய சபைகளில் எப்போதும் நடக்கும் ஒன்றைக் கற்பனை செய்துபாருங்கள். இயேசுவானவர் தமது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு இந்த உலகத்திலேயே இருந்து, அமைப்புச் சார்ந்த சபையைப் போன்ற ஒரு சபையை ஸ்தாபித்து, அதற்கு முப்பதாண்டுகள் போதகராக இருப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அவர் ஒரே சபையாருக்குப் பிரசங்கம் செய்வதைக் கற்பனை செய்து பாருங்கள். இயேசுவானவர் பிரசங்கம் செய்யும்போது, பேதுருவும் யாக்கோபும், யோவானும் முன்வரிசையில் அமர்ந்திருப்பதாக நினைத்துப் பாருங்கள். அவர்கள் இருபது ஆண்டுகளாக அதே இடத்தில்தான் அமர்ந்திருக்கிறார்கள். பேதுரு யோவானின் காதருகே குனிந்து ''நாம் இதே பிரசங்கத்தைப் பத்து முறை கேட்டிருக்கிறோம்'' என்று முணுமுணுப்பதைக் கற்பனை செய்து பாருங்கள்!

இப்படிப்பட்ட கற்பனையே அபத்தமானது என்பதை நாம் அறிவோம். ஏனென்றால் இயேசு ஒருபோதும் தம்மையோ அல்லது தமது





அப்போஸ்தலர்களையோ அப்படிப்பட்ட ஒரு சூழலுக்குள் கொண்டுவர மாட்டார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இயேசுவானவர் ஒரு குறிப்பிட்ட வழியில், ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள்ளாகச் சில சீஷர்களை உருவாக்கும்படி வந்தார். மூன்றாண்டு காலகட்டத்தில் அவர் பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் சிலரையும் சீஷராக்கினார். ஒரு சபைக் கட்டிடத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர்களுக்குப் போதித்ததின்மூலம் அவர் இதைச் செய்யவில்லை. அவர்களுக்கு முன்பாகத் தமது வாழ்க்கையை வாழ்ந்து காட்டியதின் மூலம் அவர் இதைச் செய்தார். அவர்களுடைய கேள்விகளுக்குப் பதிலளித்து, ஊழியம்செய்வதற்கான வாய்ப்புக்களை அவர்களுக்குக் கொடுத்தார். அவர் தமது பணியை முடித்துவிட்டுத் தொடர்ந்து சென்றார்.

*பிறகு நாம் ஏன் இயேசுவானவர் ஒருபோதும் செய்திராததைச் செய்கிறோம்?* பல்லாண்டுகளாக ஒரே மக்களுக்குப் பிரசங்கம் செய்வதின்மூலம் தேவன் விரும்புவதைச் செய்து முடிக்க நாம் ஏன் முயலுகிறோம்? எப்போது நாம் நமது பணியைச் செய்துமுடிப்போம்? ஏன் நமது சீஷர்கள், சில ஆண்டுகள் கழித்து, தாங்களும் சீஷராக்குவதில் ஈடுபட முடிவதில்லை?

நாம் நமது பணியைச் சரியாகச் செய்வோமானால் ஒரு கட்டத்தில் முதிர்ச்சியடைந்திருக்கும் நமது சீஷர்களுக்கு மெய்யாகவே நமது ஊழியம் தேவைப்படாது என்பதே நான் வலியுறுத்த விரும்பும் கருத்தாகும். அவர்கள் தாங்களாகவே சீஷர்களை உருவாக்கும்படி விடுவிக்கப்பட வேண்டும். தேவன் நமக்கு முன்னால் வைத்திருக்கும் இலக்கை நாம் எட்டவேண்டும், அதை எப்படிச் செய்வது என்று இயேசு நமக்குச் செய்து காட்டியிருக்கிறார். ஒரு வளர்ந்துவரும் வீட்டுச் சபையில் சீஷர்களை உருவாக்குவதற்கும், தலைவர்களை வளரச் செய்வதற்கும் தொடர்ந்த தேவை இருக்கிறது. ஒரே பிரசங்கியார் ஒரே மக்களுக்குப் பல்லாண்டுகளாகப் பிரசங்கித்துவரும் முடிவில்லாத சுழற்சிக்குள் ஒரு ஆரோக்கியமான வீட்டுச்சபை ஒருபோதும் சிக்கிக் கொள்ளாது.

## சரியான செயல்நோக்கங்கள்

சீஷர்களை உருவாக்கும்படி போதிப்பதில் வெற்றிபெற வேண்டுமானால் நாம் சரியான செயல்நோக்கங்களைப் பெற்றிருக்க வேண்டும். ஒருவர் தவறான காரணங்களுக்காக ஊழியத்தில் இருப்பாரானால், அவர் தவறான காரியங்களையே செய்வார். இன்று சபைகளில் அதிகமான கள்ளப்போதனைகளும் சமநிலையில்லாத போதனைகளும் காணப்படுவதற்கு இதுவே அடிப்படையான காரணமாகும். புகழ் பெறுவது, மற்றவர்களுடைய பார்வையில் வெற்றிகரமானவராவது, அதிகமான பணத்தைச் சம்பாதிப்பது இவை ஒரு ஊழியரின் செயல்

நோக்கங்களாக இருக்குமானால், அவர் கண்டிப்பாகத் தேவனுடைய பார்வையில் தோல்வியைச் சந்திப்பார். மற்றவர்களுக்கு முன்பாகப் பிரபலமாக வேண்டும், பணத்தைச் சம்பாதிக்க வேண்டும் ஆகிய காரியங்களில் வெற்றிபெற்றாலும், ஒருநாள் அவருடைய தவறான செயல்நோக்கங்கள் கிறிஸ்துவின் நியாயாசனத்தில் வெளியரங்கமாக்கப் படும், அவர் தனது பணிக்காக எந்தப் பரிசையும் பெற மாட்டார். ஒருவேளை அவர் பரலோக ராஜ்யத்துக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப் பட்டாலும், அங்கே எல்லோரும் அவரைக்குறித்த சத்தியத்தை அறிந்துகொள்ளுவார்கள்.[25] அவர் பரிசு பெறாததும், ராஜ்யத்தில் அவர் கீழான இடத்தில் இருப்பதும் அதை வெளிப்படுத்திவிடும். பரலோகத்தில் வெவ்வேறான வரிசைகள் இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. இயேசுவானவர் இவ்வாறு எச்சரித்திருக்கிறார்:

> ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான் [மத். 5:19].

கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவைகளைப் போதிக்கும் ஊழியர்கள் பூமியில் பாடுகளை எதிர்நோக்க வேண்டி யிருக்கலாம். தமக்குக் கீழ்ப்படிகிறவர்கள் பாடுபட வேண்டியிருக்கும் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் [பார்க்க, மத். 5:10–12; யோவான் 11:33]. அவர்கள் உலகப்பிரகாரமான வெற்றியையும், புகழையும், செல்வத்தையும் பெற முடியாது. ஆனால் அவர்கள் வருங்காலப் பரிசையும், பாராட்டையும் தேவனிடமிருந்து பெறுவார்கள். நீங்கள் எதைப் பெற விரும்புகிறீர்கள்? இதைக் குறித்துப் பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே. நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச் செய்தார். அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிற வனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற

[25] ஒருவேளை என்று சொல்லப்பட்டிருப்பதற்குக் காரணம் அவர் ஆட்டுத் தோலைத் தரித்திருக்கும் ஓநாயாக இருப்பாரானால், சுயநல நோக்கம் கொண்ட ''ஊழியராகவே'' இருக்கிறார். அவர் நரகத்தில் தள்ளப்படுவார். இவர்களைத் தவறான நோக்கங்களைக்கொண்ட மெய்யான ஊழியர்களிடமிருந்து பிரித்துக் காட்டுவது அவர்களுடைய தவறான நோக்கங்களின் அளவேயாகும்.





> தேவனாலே எல்லாமுமாகும். மேலும் நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான். நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட் களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணை யும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்.
>
> எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். போடப்பட்டிருக் கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளக்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக் கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும் [1 கொரி. 3:5–15].

பவுல் தனது அப்போஸ்தல ஊழியத்தை அஸ்திபாரமிடும் கட்டிடக் கலைஞர் ஒருவருக்கு ஒப்பிடுகிறார். கொரிந்துவில் பவுல் சபையை ஸ்தாபித்தபிறகு அங்கே வந்த உபதேசியாராகிய அப்பொல்லோ அந்த அஸ்திபாரத்தின்மேல் கட்டியதாகப் பவுல் குறிப்பிடுகிறார்.

பவுலும் அப்பொல்லோவும் இறுதியில் அவர்களுடைய பணியின் *அளவைக்* கொண்டு அல்ல, *தரத்தைக்* கொண்டு பரிசளிக்கப்படுவார்கள் என்பதைக் கவனியுங்கள் [பார்க்க, 3:13].

உருவகமாகக் கூறுவோமானால், பவுலும் அப்பொல்லோவும் ஆறு வெவ்வேறு வகைப்பட்ட பொருட்களைக் கொண்டு தேவனுடைய மாளிகையைக் கட்ட முடியும். இவைகளில் மூன்று சாதாரணமானவை, அதிக விலையில்லாதவை, நெருப்பில் எரியக் கூடியவை. ஆனால் மற்ற மூன்றும் அசாதாரணமானவை, அதிக விலைமதிப்புள்ளவை, நெருப்பில் எரியாதவையாகும். ஒருநாள் அவர்களுடைய கட்டுமானப் பொருட்கள் தேவனுடைய அக்கினியின் மூலமாகப் பரிசோதிக்கப்படும்.

மரமும், புல்லும், வைக்கோலும் நெருப்பில் அழிந்து, அவைகளின் மதிப்பில்லாததும், உலகப்பிரகாரமானதுமான தரத்தை வெளிப்படுத்துகின்றன. ஆனால் விலைமதிப்பற்றதும், தேவனுடைய பார்வையில் நித்தியமானதுமான பணிகளைக் குறிக்கும் பொன்னும், வெள்ளியும் விலையேறப்பெற்ற கல்லும் அக்கினியில் அழியாமல் நிற்கும்.

கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பின்போது வேதாகம ஆதாரமில்லாத போதனை எரிந்து சாம்பலாக்கப்படும் என்பது நிச்சயம். அதுபோல, மாம்சத்தின் சக்தியிலும், வழிமுறைகளிலும், ஞானத்திலும் செய்யப்படும் எதுவும், தவறான செயல்நோக்கங்களுக்காகச் செய்யப்படும் எதுவும் அழிந்துபோகும். மக்களின் பாராட்டைப்பெற வேண்டும் என்ற செயல் நோக்கத்தோடு செய்யப்படும் எதுவும் பரிசைப் பெற மாட்டாது என்று இயேசுவானவர் எச்சரித்திருக்கிறார் (பார்க்க, மத். 6:1–6, 16–18). இப்படிப்பட்ட மதிப்பில்லாத பணிகள் இப்போது மானிடக் கண்களுக்குத் தெரியாவிட்டாலும், பவுல் எச்சரித்ததுபோல வருங்காலத்தில் எல்லோருக்கும் அது வெளியரங்கமாக்கப்படும். தனிப்பட்ட முறையில் எனது பணிகள் மரம், புல், வைக்கோலாக இருக்குமானால் பின்னால் நான் அதைத் தெரிந்துகொள்ளுவதைவிட இப்போதே தெரிந்துகொள்ளுவது நலமாக இருக்கும். இப்போது மனந்திரும்புவதற்கான காலம் இருக்கிறது; பின்னால் அதற்கான வாய்ப்பேயில்லை.

## நமது செயல்நோக்கங்களைச் சீர்தூக்கிப் பார்த்தல்

நமது செயல்நோக்கங்களைக் குறித்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுவது மிக எளிதாகும். நான் அப்படி ஏமாற்றப்பட்டிருக்கிறேன். நமது செயல்நோக்கங்கள் தூய்மையானவை என்பதை எப்படி நாம் அறிந்துகொள்ள முடியும்?

நமது செயல்நோக்கங்கள் தவறானவைகளாக இருக்குமானால் அவைகளை வெளிப்படுத்தும்படி தேவனிடம் வேண்டிக்கொள்ளுவதே சிறந்த வழியாகும். பிறகு நமது சிந்தனைகளையும், செயல்களையும் அளந்துபார்க்க வேண்டும். ஜெபிப்பது, ஏழைகளுக்குக் கொடுப்பது போன்ற நற்கிரியைகளை இரகசியமாகச் செய்ய வேண்டும் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். இப்படிச் செய்வதின் மூலம் நாம் மனிதருடைய பாராட்டை அல்ல, தேவனுடைய பாராட்டையே விரும்புகிறோம் என்பது தெளிவாகிறது. மக்கள் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது மட்டும் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோமானால் மிகவும் மோசமாக இருப்பதை அது சுட்டிக்காட்டுகிறது. நாம் பிடிபட்டால் நம்மையோ அழித்துப்போடும் பயங்கரமான பாவங்களை விட்டுவிட்டு, எவரும் அறிய முடியாத சிறிய பாவங்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்போமானால், அது நமது செயல்நோக்கங்கள் தவறானவை என்பதைக் காட்டுகிறது. நமது ஒவ்வொரு சிந்தனையையும், வார்த்தை





யையும், செயலையும் அறிந்த தேவனைப் பிரியப்படுத்த நாம் மெய்யாகவே முயலுவோமானால், எப்போதுமே, சிறிய காரியங்களிலும் பெரியகாரியங்களிலும், மற்றவர்களால் அறியக் கூடிய காரியங்களிலும், அறியக் கூடாத காரியங்களிலும் அவருக்குக் கீழ்ப்படிய முயலுவோம்.

இதைப்போலவே, நமது செயல்நோக்கங்கள் சரியாக இருக்குமானால், கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும் சீஷர்களை உருவாக்குவதற்கு மாறாக, சபைக்கு வருகை தருபவர்களின் எண்ணிக்கையை மட்டும் அதிகரிக்கச் செய்யும் சபை வளர்ச்சி குறித்த செயல்முறைகளைப் பின்பற்ற மாட்டோம்.

ஆவிக்குரியவர்களாக இராமல் உலகப்பிரகாரமானவர்களாக இருப்பவர்களுக்குப் பிரியமான தலைப்புகளைக் குறித்து மட்டுமல்ல, தேவனுடைய வார்த்தையை முழுவதுமாகப் போதிப்போம்.

முழு வேதாகமத்திலிருந்து குறிப்பிட்ட வசனங்களின் பின்னணியை எடுத்துப்போடக் கூடிய வகையில் அந்த வசனங்களைத் திரித்துப் போதிக்க மாட்டோம்.

நமக்காகப் பட்டங்களையும் பதவிகளையும் நாம் நாட மாட்டோம். எல்லோராலும் அறியப்படுவதை நாட மாட்டோம்.

செல்வந்தர்களுக்காக நாம் ஊழியம்செய்ய மாட்டோம்.

நாம் பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்காமல், எளிமையாக வாழ்ந்து, நம்மால் முடிந்தவரை கொடுத்து, நமது மந்தைக்கு முன்பாக நல்ல உக்கிராணத்துவத்துக்கு மாதிரியாக இருப்போம்.

நமது பிரசங்கங்களைக் குறித்து மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதற்கு மாறாக, தேவன் என்ன நினைப்பார் என்பதில் அக்கறை காட்டுவோம்.

உங்கள் செயல்நோக்கங்கள் எப்படியிருக்கின்றன?

## சீஷராக்குவதைத் தோற்கடிக்கச் செய்யும் ஒரு கோட்பாடு

சீஷர்களை உருவாக்கும் ஊழியர் ஒருபோதும் சீஷராக்குதலுக்கு விரோதமாகச் செயல்படும் போதனையைக் கொடுக்க மாட்டார். அதாவது, *ஆண்டவராகிய இயேசுவுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தாலும் மக்கள் சௌகரியமான உணர்வைப் பெறும்படி அவர் எதையும் சொல்ல மாட்டார்*. நியாயத்தீர்ப்பைக் குறித்த பயமில்லாமல் பாவம் செய்வதற்கான ஏதுவாக அவர் தேவ கிருபையை அறிமுகம் செய்ய மாட்டார். மாறாக, பாவத்தைவிட்டு மனந்திரும்பி, ஜெயங்கொள்ளும் வாழ்க்கை வாழுவதற்கு ஏதுவாக அவர் தேவனுடைய கிருபையைக் குறித்துப் போதிப்பார். ஜெயங்கொள்ளுகிறவர்கள் மட்டுமே தேவனுடைய

ராஜ்யத்தைச் சுதந்தரிப்பார்கள் என்று வேதவசனங்கள் கூறுவதை நாம் அறிவோம் [பார்க்க, வெளி. 2:11; 3:5; 21:7].

துரதிருஷ்டவசமாக, சில நவீன கால ஊழியர்கள் சீஷர்களை உருவாக்கும் இலக்குக்கு அதிகமான பாதிப்பை உண்டாக்கக்கூடிய, வேதாகமரீதியல்லாத கோட்பாடுகளைப் பின்பற்றுகிறார்கள். *நிபந்தனையில்லாத நித்திய பாதுகாப்பு* அல்லது ''ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர்கள் எப்போதைக்குமாக இரட்சிக்கப்பட்டவர்கள்'' என்ற கோட்பாடு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அதிகப் பிரபலமாகிவருகிறது. மறுபடியும் பிறந்த மக்கள் அதன் பிறகு எப்படி வாழ்ந்தாலும் தங்கள் இரட்சிப்பை இழந்துபோக முடியாது என்று இந்தக் கோட்பாடு சொல்லுகிறது. கிருபையினாலே இரட்சிப்பு என்பதே இதற்குக் காரணம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இரட்சிப்புக்காக ஜெபிக்கும் மக்களை முதலில் இரட்சித்த அதே கிருபை அவர்களை இரட்சிக்கப்பட்டவர்களாகக் காத்துக்கொள்ளும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு அப்பாற்பட்ட எந்தக் கருத்தும் கிரியைகளினால் இரட்சிக்கப்படுகிறோம் என்று சொல்லுவதற்கு ஒப்பாகும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு கருத்து பரிசுத்தத்துக்கு விரோதமானதாக இருக்கிறது. ஒருவர் பரலோகத்தில் நுழைவதற்குக் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல் அத்தியாவசியமில்லை என்று கருதப்படுகிறபடியால், கீழ்ப்படிதலுக்காகக் கிரயம் கொடுக்க வேண்டியிருக்கிறபடியால் இயேசுவுக்குக் கீழ்ப்படியும்படி செய்யும் தூண்டுதல் இல்லாமல் போகிறது.

இந்தப் புத்தகத்தில் ஏற்கெனவே நான் கூறியபடி, மானிடருக்குத் தேவன் அருளும் கிருபை அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற மானிடப் பொறுப்பை எடுத்துப்போடுவதில்லை. இரட்சிப்பானது கிருபையினால் மட்டுமல்ல, விசுவாசத்தைக்கொண்டும் என்று வேதவசனம் சொல்லுகிறது [பார்க்க, எபே. 2:8]. இரட்சிப்புக்குக் கிருபை, விசுவாசம் இரண்டுமே அத்தியாவசியமாக இருக்கின்றன. விசுவாசம் என்பது தேவனுடைய கிருபைக்குச் சரியான வகையில் செவிசாய்ப்பதாகும். மெய்யான விசுவாசம் எப்போதுமே மனந்திரும்புதலுக்கும், கீழ்ப்படிதலுக்கும் வழிநடத்துகிறது. கிரியையில்லாத விசுவாசம் செத்ததாகவும், பயனற்றதாகவும், இரட்சிக்கக்கூடாததாகவும் இருக்கிறது என்று யாக்கோபு சொல்லுகிறார் [பார்க்க, யாக். 2:14–26].

எனவேதான் வேதாகமம் இரட்சிப்பானது தொடர்ந்த விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் சார்ந்திருக்கிறது என்று சொல்லுகிறது. பல வேதவசனங்கள் இதை முற்றிலும் தெளிவாக்கியிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கொலோசெ பட்டணத்து விசுவாசிகளுக்குப் பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:





> முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். *நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்.* அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது [கொலோ. 1:21–23 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இதைவிடத் தெளிவாகச் சொல்ல முடியாது. ஒரு இறையியலாளரால் மட்டுமே பவுல் கூறியிருப்பதற்கு அர்த்தத்தைத் திரித்துக் கூற முடியும். நாம் தொடர்ந்து விசுவாசத்தில் இருப்போமானால் இயேசுவானவர் நம்மைக் குற்றமற்றவர்களாக உறுதிப்படுத்துவார். இதே சத்தியம் ரோமர் 11:13–24, 1 கொரிந்தியர் 15:1–2, எபிரெயர் 3:12–14, 10:38–39 வசனங்களிலும் மறுபடியுமாகப் போதிக்கப்பட்டுள்ளது. இறுதியான இரட்சிப்பு தொடர்ந்து விசுவாசத்தில் இருப்பதைச் சார்ந்திருக்கிறது என்பது தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

## பரிசுத்தத்தின் அத்தியாவசியம்

பாவம் செய்வதின்மூலம் ஒரு விசுவாசி நித்தியஜீவனை இழந்துபோக முடியுமா? கீழ்க்கண்ட பல வசனங்களில் இதற்கான பதிலை நாம் காணலாம். பல்வேறு பாவங்களைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க முடியாது என்று இந்த வசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன. ஒரு விசுவாசி பவுலினால் கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலுள்ள பாவத்துக்குத் திரும்புவாரானால் அவர் நிச்சயமாக இறுதி இரட்சிப்பை இழந்துபோவார்:

> அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; *வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும்* தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை [1 கொரி. 6:9–10 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].
>
> மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: *விபசாரம், வேசித்தனம், அசுத்தம்,*

*காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள்* முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன் (கலா. 5:19–21 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

*விபசாரக்காரனாவது, அசுத்தனாவது,* விக்கிராகாராதனைக்காரனாகிய *பொருளாசைக்காரனாவது* தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (எபே. 5:5–6 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

இந்த ஒவ்வொரு வேளையிலும் பவுல் விசுவாசிகளுக்கு எழுதி அவர்களை எச்சரிக்கிறார் என்பதைக் கவனியுங்கள். இரண்டு முறை அவர் வஞ்சிக்கப்படாதிருங்கள் என்று எச்சரித்திருக்கிறார். ஏதேனும் ஒரு விசுவாசி இந்தப் பாவங்களில் எதையாவது செய்தாலும் தான் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க முடியும் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே அவர் இந்த எச்சரிப்பைக் கொடுத்திருக்கிறார்.

இயேசுவானவர் தமக்கு நெருக்கமான சீஷர்களாக இருந்த பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா இவர்களிடம் தமது வருகையின்போது அவர்கள் ஆயத்தமில்லாமல் இருப்பதினால் அவர்கள் நரகத்தில் தள்ளப்படலாம் என்பதைக் கூறி எச்சரித்திருக்கிறார். கீழ்க்கண்ட வார்த்தைகள் அவிசுவாசிகளின் கூட்டத்தாருக்கு அல்ல, இவர்களுக்கே சொல்லப்பட்டுள்ளன என்பதைக் கவனியுங்கள் (பார்க்க, மாற்கு 13:1–4):

*உங்கள் ஆண்டவர்* இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்தெழுந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள். நீங்கள் (பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா) நினையாத நாழிகையிலே





மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் (பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா) ஆயத்தமாயிருங்கள்.

ஏற்ற வேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்? எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான். தன் ஆஸ்திகள் எல்லாவற்றின்மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்த ஊழியக்காரனோ பொல்லாதவனாயிருந்து: என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக்கொண்டு, தன் உடன் வேலைக்காரரை அடிக்கத் தொடங்கி, வெறியரோடே புசிக்கவும் குடிக்கவும் தலைப்பட்டால், அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும், அவனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத். 24:42–51 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

இந்த நிகழ்ச்சி கூறும் நன்னெறி என்ன? ''பேதுருவே, யாக்கோபே, யோவானே, அந்திரேயாவே, இந்த உவமைக்கதையிலுள்ள வேலைக்காரனைப்போல இராதேயுங்கள்.'' [26]

தமது நெருக்கமான சீஷர்களுக்குத் தாம் கூறியதை உறுதிப்படுத்தும்படியாக இயேசுவானவர் உடனடியாகப் பத்துக் கன்னிகைகள் குறித்த உவமைக் கதையைச் சொன்னார். இந்தப் பத்துக் கன்னிகைகளும் துவக்கத்தில் மணவாளனின் வருகைக்காக ஆயத்தமாக இருந்தார்கள். ஆனால் ஐந்து பேர் ஆயத்தமில்லாதவர்களாக ஆகிப் போனார்கள். அவர்கள் திருமண விருந்தில் சேர்த்துக்கொள்ளப்பட

[26] இயேசுவானவர் தமது சீஷர்களுக்கே இதைப் போதிக்கிறார், உவமைக் கதையிலுள்ள உண்மையில்லாத வேலைக்காரன் நிச்சயமாக ஒரு விசுவாசியையே குறிப்பிடுகிறான் என்பதை மறுக்கமுடியாத சிலர், இந்த அழுகையும், பற்கடிப்பும் உள்ள இடம் பரலோகத்தின் வெளிவட்டத்தில் உள்ளது என்று சொல்லுகிறார்கள். அங்கே உண்மையில்லாத விசுவாசிகள் தாங்கள் பரிசுகளைப் பெறவில்லை என்று தாற்காலிகமாகப் புலம்பியபிறகு, இயேசு அவர்களுடைய கண்ணீர்களைத் துடைத்து, அவர்களைப் பரலோகத்துக்குள் ஏற்றுக்கொள்ளுவார் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

வில்லை. ‘‘மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாளிகையையாவது நீங்கள் [பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா] அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்’’ [மத். 25:13]. அதாவது, ‘‘பேதுருவே, யாக்கோபோ, யோவானே, அந்திரேயாவே, இந்த ஐந்து புத்தியில்லாத கன்னிகைகளைப்போல இராதேயுங்கள்.’’ பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும் ஆயத்தமில்லாமல் போய்விடக் கூடிய சாத்தியக் கூறு இல்லாவிட்டால் இயேசுவானவர் அவர்களை எச்சரித்திருக்க மாட்டார்.

பிறகு இயேசு உடனடியாக அவர்களுக்குப் பத்துத் தாலந்துகள் பற்றிய உவமைக்கதையைக் கூறினார். மறுபடியுமாக அவர் அதே செய்தியைத்தான் கொடுத்தார்: ‘‘தனது எஜமான் திரும்பிவந்தபோது அவரிடம் எதையும் காட்ட முடியாமலிருந்த ஒரு தாலந்தைப் பெற்றவனைப்போல இராதேயுங்கள்.’’ உவமைக்கதையின் இறுதியில் எஜமான் இப்படிக் கூறுகிறார்: ‘‘பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்’’ [மத். 25:30]. இயேசுவானவர் இதைவிடத் தெளிவாகத் தமது செய்தியைக் கொடுத்திருக்க முடியாது. அவர் கூறியதின் அர்த்தத்தை ஒரு இறையியலாளரால் மட்டுமே திரித்துக் கூற முடியும். இயேசுவானவர் திரும்பிவரும்போது பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும் கீழ்ப்படியாதவர்களாகக் காணப்பட்டால் அவர்கள் நரகத்தில் தள்ளப்படக் கூடிய அபாயம் இருந்தது. பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா இவர்களுடைய நிலையே இப்படியிருக்குமானால், அது நமக்கும் பொருந்தும். இயேசுவானவர் வாக்குத்தத்தம் அருளியபடி அவருடைய பிதாவின் சித்தத்தைச் செய்பவர்கள் மட்டுமே பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ள முடியும் [ பார்க்க, மத். 7:21].[27]

நிபந்தனையில்லாத நித்திய பாதுகாப்பு என்ற கோட்பாட்டைப் போதிப்பவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாகச் சாத்தானுக்கு உதவியாகக் கிரியைசெய்கிறார்கள். இயேசுவும் அப்போஸ்தலர்களும் போதித்தவைகளுக்கு இவர்கள் விரோதமாகப் போதிக்கிறார்கள். தாம் கட்டளையிட்ட

[27] ஒரு தனிப்பட்ட பாவத்தைச் செய்யும் கிறிஸ்தவர்கள் உடனடியாகத் தங்கள் இரட்சிப்பை இழந்துபோவதில்லை என்பது உண்மைதான். தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்பவர்களைத் தேவன் மன்னிக்கிறார் [அவர்கள் தங்களுக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களை மன்னிப்பார்களானால்]. தேவனுடைய மன்னிப்பை வேண்டிக்கொள்ளாதவர்கள் அவருடைய சிட்சைக்கு ஆளாகிறார்கள். தேவனுடைய தொடர்ந்த சிட்சைக்குப் பிறகும் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொள்ளும் விசுவாசிகளே தங்கள் இரட்சிப்பை இழந்துபோகிறார்கள். தேவனுடைய இந்தச் சிட்சையைக் குறித்து நாம் மற்றொரு அத்தியாயத்தில் விரிவாகப் பார்ப்போம்.





எல்லாவற்றையும் கைக்கொள்ளும் சீஷர்களை உருவாக்க வேண்டும் என்ற இயேசுவின் கட்டளையை அவர்கள் ஒன்றுமில்லாததாக ஆக்குகிறார்கள், பரலோகத்துக்குச் செல்லும் இடுக்கமான பாதையை அடைத்துப்போடுகிறார்கள், நரகத்துக்குச் செல்லும் விசாலமான பாதையை இன்னும் விசாலமாக்குகிறார்கள். [28]

## சீஷர்களை உருவாக்குவதைத் தோற்கடிக்கும் மற்றொரு நவீன கோட்பாடு

நிபந்தனையில்லாத நித்திய பாதுகாப்பு என்ற கோட்பாடு மட்டுமே இறுதியான இரட்சிப்புக்குப் பரிசுத்தம் அத்தியாவசியமில்லை என்று நினைக்கும்படி மக்களைத் தூண்டுகிறது என்று சொல்ல முடியாது. தேவனுடைய அன்பும்கூட சீஷர்களை உருவாக்குதலுக்குத் தடையாக இருக்குமளவுக்குச் சித்திரிக்கப்படுகிறது. ‘‘தேவன் எந்தவித நிபத்தனையுமில்லாமல் உங்களிடம் அன்புகாட்டுகிறார்’’ என்று பிரசங்கிமார்கள் மக்களிடம் போதிக்கிறார்கள். மக்கள் இதை ‘‘நான் தேவனுக்குக் கீழ்ப்படிந்தாலும் சரி, கீழ்ப்படியாவிட்டாலும் சரி, தேவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறார்’’ என்று எடுத்துக்கொள்ளுகிறார்கள். இது நிச்சயமாக உண்மையில்லாத காரியமாகும்.

இதே பிரசங்கிமார்கள் தேவன் மறுபடியும் பிறவாதவர்களை நரகத்தில் தள்ளுகிறார் என்று விசுவாசிக்கிறார்கள். அது சரிதான்.

[28] ஒரு கிறிஸ்தவன் தனது இரட்சிப்பை இழந்துபோகக் கூடும் என்பதை இன்னும் நம்பாதவர்கள் கீழ்க்கண்ட புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் எல்லாவற்றையும் எடுத்து வாசித்துப் பார்க்க வேண்டும்: மத். 18:21–35; 24:4–5, 11–13, 23–26, 42–51; 25:1–30; லூக்கா 8:11–15; 11:24–28; 12:42–46; யோவான் 6:66–71; 8:31–32, 51; 15:1–6; அப்போஸ்தலர் 11:21–23; 14:21–22; ரோமர் 6:11–23; 8:12–14, 17; 11:20–22; 1 கொரி. 9:23–27; 10:1–21; 11:29–32; 15:12; 2 கொரி. 1:24; 11:24; 12:21–13:5; கலா. 5:14; 6:7–9; பிலி. 2:12–16; 3:17–4:1; கொலோ. 1:21–23; 2:4–8, 18–19; 1 தெச. 3:1–8; 1 தீமோ. 1:3–7, 18–20; 4:1–16; 5:5–6, 11–15, 6:9–12, 17–19, 20–21; 2 தீமோ. 2:11–18; 3:13–15; எபி. 2:1–3; 3:6–19; 4:1–16: 5:8–9; 6:4–9, 10–20; 10:19–39; 12:1–17, 25–29; யாக். 1:12–16; 4:4–10; 5:19–20; 2 பேதுரு 1:5–11; 2:1–22; 3:16–17; 1 யோவான் 2:15–2:28; 5:16; 2 யோவான் 6–9; யூதா 20–21; வெளி. 2:7, 10–11, 17–26; 3:4–5, 8–12, 14–22; 21:7–8; 22:18–19. நிபந்தனையில்லாத நித்திய பாதுகாப்பு என்ற கோட்பாட்டைப் போதிக்கிறவர்கள் தங்களுக்கு ஆதாரவாக இரட்சிப்பதில் தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்பதை மட்டுமே வலியுறுத்துகிறார்கள். மானிடப் பொறுப்பைக் குறித்து அவர்கள் எதுவும் சொல்லு வதில்லை. அவர்கள் சொல்லுவது மேலே நான் பட்டியலிட்டுள்ள வசனங்களுக்கு இசைவாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். தேவன் தாம் உண்மையுள்லவராக இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருப்பது மற்றொருவர் உண்மையாக இருப்பார் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. நான் என் மனைவியிடம் நான் அவளைவிட்டுப் போகமாட்டேன், இது என்னுடைய வாக்குத்தத்தம் என்று சொல்லுவது அவள் என்னைவிட்டுச் செல்ல மாட்டாள் என்பதற்கு உத்திரவாதமாகாது.

இப்போது நாம் இதைக் குறித்துச் சிந்தித்துப் பார்ப்போம். தேவன் தாம் நரகத்தில் தள்ளுபவர்களை ஒப்புக்கொள்ளுவதில்லை என்பது *தெளிவாகிறது*. பிறகு அவர் அவர்களிடம் அன்புகாட்டுகிறார் என்று எப்படிச் சொல்ல முடியும்? தேவனுடைய கோபாக்கினைக்கு ஆளாகி, நரகத்தில் நிரந்தரமாகச் சித்திரவதையை அனுபவிக்கும் மக்கள் தேவனால் நேசிக்கப்படுகிறார்கள் என்று சொல்ல முடியுமா? அவர்கள் உங்களிடம் தேவன் தங்களை நேசிப்பதாகச் சொல்லுவார்கள் என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக இல்லை. தேவன் தாம் அவர்களை நேசிப்பதாகச் சொல்லுவாரா? நிச்சயமாக இல்லை. அவர்களை அவர் வெறுக்கிறார். எனவேதான் அவர்கள் அவர்களை நரகத்தில் தள்ளித் தண்டிக்கிறார். அவர் அவர்களை ஒப்புக்கொள்ளவுமில்லை, நேசிக்கவு மில்லை.

இப்படியிருக்கும்போது, பூமியிலுள்ள பாவிகளிடம் தேவன் காட்டும் அன்பு *இரக்கமுள்ள அன்பாக* இருக்கிறது, அது தாற்காலிகமானதாகும். இது *ஒப்புதலளிக்கும் அன்பு* அல்ல. அவர் அவர்களின்மீது இரக்கம் கொண்டு தமது நியாயத்தீர்ப்பைத் தள்ளிப்போட்டிருக்கிறார். அவர்களுக்கு மனந்திரும்புதலுக்கான வாய்ப்பைக் கொடுக்கிறார். இயேசு அவர்களுக்காக மரித்து, அவர்கள் மன்னிப்பைப் பெறுவதற்கான வழிவகையை உண்டாக்கியிருக்கிறார். இந்த வகையில் மட்டுமே தேவன் அவர்களை நேசிக்கிறார் என்று சொல்ல முடியும், தேவன் ஒருபோதும் அவர்களுக்கு *ஒப்புதலளிப்பதில்லை*. ஒரு தகப்பன் தன் பிள்ளையிடம் கொண்டிருக்கும் அன்பை அவர் கொண்டிருப்பதில்லை. மாறாக, வேதாகமம் இப்படிச் சொல்லுகிறது: ''தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் *தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்''* [சங். 103:13 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. எனவே தேவன் தமக்குப் *பயப்படாத*வர்களின்மீது இதே இரக்கத்தைக் கொண்டிருக் கிறார் என்று சொல்ல முடியாது. பாவிகளின்மீது தேவன் கொண்டிருக்கும் அன்பு, ஒரு நீதிபதி ஒரு குற்றவாளியின்மீது இரக்கப்பட்டு அவனுடைய மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பது போன்றதாகும்.

அப்போஸ்தலருடைய நடபடிகளின் நூலில், சுவிசேஷத்தைப் பிரசங்கித்த எவரும் இரட்சிக்கப்படாதவர்களிடம் தேவன் அவர்களை நேசிக்கிறார் என்று சொல்லியிருப்பதை நம்மால் பார்க்க முடியாது. மாறாக, வேதாகமப் பிரசங்கிமார்கள் மக்களைத் தேவனுடைய கோபாக்கினையைக் குறித்து எச்சரித்தார்கள். தேவன் அவர்களை ஒப்புக்கொள்ள*வில்லை* என்பதை அறிவித்து, மனந்திரும்புமாறு அவர்களை அழைத்தார்கள். அவர்கள் ஆபத்தில் இருப்பதையும், அவர்கள் தங்கள் வாழ்க்கையை முழுவதுமாக மாற்றிக்கொள்ளுவது அவசியம் என்றும் வலியுறுத்தினார் கள். [இன்றைய பல ஊழியர்கள் சொல்லுவதுபோல] தேவன் அவர்களை நேசிக்கிறார் என்று அவர்கள் சொல்லியிருப்பார்களானால், தாங்கள்





அபாயத்தில் இல்லை, தங்களுக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளவில்லை, எனவே மனந்திரும்ப வேண்டிய அவசியமில்லை என்ற எண்ணத்தையே கேட்பவர்களின் மனதில் உண்டாக்கியிருப்பார்கள்.

### பாவிகள்மீதான தேவனுடைய வெறுப்பு

இன்று பாவிகளின்மீது தேவனுடைய அன்பைக் குறித்துப் போதிக்கப்படுவதற்கு மாறாக, வேத வசனங்கள் தேவன் பாவிகளை *வெறுக்கிறார்* என்றே அடிக்கடி சொல்லியிருக்கின்றன:

> வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்க மாட்டார்கள்; *அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர்*. பொய் பேசுகிறவர்களை அழிப்பீர்; இரத்தப்பிரியனையும் சூதுள்ள மனுஷனையும் கர்த்தர் அருவருக்கிறார் [சங். 5:5–6 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

> கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார்; துன்மார்க்க னையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் *அவருடைய உள்ளம் வெறுக்கிறது* [சங். 11:5 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> நான் என் வீட்டை விட்டுவிட்டேன், என் சுதந்தரத்தை நெகிழ விட்டேன்; என் ஆத்துமா நேசித்தவனை அவனுடைய சத்துருவின் கையிலே ஒப்புக் கொடுத்தேன். என் சுதந்தரம் காட்டிலுள்ள சிங்கத்தைப் போல் எனக்காயிற்று; அது எனக்கு விரோதமாய் கெர்ச்சிக்கிறது; *ஆதலால் அதை வெறுக்கிறேன்* [எரே. 12:7–8 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> அவர்களுடைய பொல்லாப்பெல்லாம் கில்காலிலே நடக்கும்; *அங்கே நான் அவர்களை வெறுத்தேன்*; அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம் அவர்களை நான் என் சமுகத்தைவிட்டுத் துரத்துவேன்; இனி அவர்களை நேசிக்க மாட்டேன்; அவர்களுடைய அதிபதிகள் எல்லாரும் துரோகிகள் [ஓசியா 9:15 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

மேலேயுள்ள வசனங்கள் எல்லாம் தேவன் மக்கள் *செய்வதை* மட்டுமல்ல, *அவர்களையே* வெறுக்கிறார் என்பதைக் காட்டுகின்றன. தேவன் பாவிகளை நேசிக்கிறார், ஆனால் பாவத்தை வெறுக்கிறார் என்ற பிரபலமான வாசகத்தைக் குறித்து இது மறுபடியுமாக நம்மைச் சிந்திக்க வைக்கிறது. ஒரு நபரை நாம் அவர் செய்வதிலிருந்து பிரிக்க முடியாது. *அவர் என்ன செய்கிறாரோ அது அவர் யார் என்பதை வெளிப்படுத்து கிறது*. எனவே தேவன் மக்கள் செய்யும் பாவங்களை மட்டுமல்ல,

அவைகளைச் செய்யும் மக்களையும் நீதியாக வெறுக்கிறார். தாம் வெறுப்பதைச் செய்கிறவர்களைத் தேவன் ஒப்புக்கொள்ளுகிறார் என்றால், அவர் தமக்குத்தாமே முரண்பாடாக இருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். மானிட நீதிமன்றங்களில் *மக்கள்* அவர்களுடைய குற்றங்களுக்காக விசாரிக்கப்பட்டு, நீதியான தண்டனை *அவர்களுக்கு* வழங்கப்படுகிறது. நாம் குற்றத்தை மட்டும் வெறுத்து குற்றம் செய்கிறவர்களை ஏற்றுக்கொள்ளுவதில்லை.

### தேவன் அருவருக்கும் மக்கள்

தேவன் சில குறிப்பிட்டவர்களை வெறுக்கிறார் என்று வேத வசனம் உறுதிப்படுத்துவது மட்டுமின்றி, சிலவகைப்பட்ட பாவகரமான மக்கள் அவருக்கு அருவருப்பான மக்களாக இருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மக்கள் *செய்வது* மட்டும் தேவனுக்கு அருவருப்பாக இருக்கிறது என்று கீழ்க்கண்ட வசனங்கள் சொல்லவில்லை, இவைகளைச் செய்யும் *மக்களே* தேவனுக்கு அருவருப்பானவர்களாக இருக்கிறார்கள் என்றே சொல்லப்பட்டிருக் கிறது. தேவன் அவர்களுடைய *பாவத்தை* அருவருக்கிறார் என்று சொல்லப்படவில்லை, *அவர்களையே* அருவருக்கிறார் என்று சொல்லப் பட்டிருக்கிறது:

> புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது, ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது; அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு *அருவருப்பானவர்கள்* [உபா. 22:5 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].
>
> இவைமுதலான அநியாயத்தைச் செய்கிற எவனும் உன் தேவனாகிய கர்த்தருக்கு *அருவருப்பானவன்* [உபா. 25:16].
>
> உங்கள் குமாரனின் மாம்சத்தையும் உங்கள் குமாரத்தி களின் மாம்சத்தையும் புசிப்பீர்கள். நான் உங்கள் மேடைகளை அழித்து, உங்கள் விக்கிரகச் சிலைகளை நிர்த்தூளியாக்கி, உங்கள் உடல்களை உங்கள் நரகலான தேவர்களுடைய உடல்கள்மேல் எறிவேன்; என் ஆத்துமா உங்களை *அரோசிக்கும்* [லேவி. 26:29–30 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].
>
> வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்க மாட்டார்கள்; அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர். பொய் பேசுகிறவர்களை அழிப்பீர்; இரத்தப்பிரியனையும் சூதுள்ள மனுஷனையும் கர்த்தர்





> *அருவருக்கிறார்* [சங். 5:5–6 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].
>
> மாறுபாடுள்ளவன் கர்த்தருக்கு *அருவருப்பானவன்*; நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கிறது [நீதி. 3:32 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].
>
> மாறுபாடுள்ள இருதயமுடையவர்கள் கர்த்தருக்கு *அருவருப்பானவர்கள்*; உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள் [நீதி. 11:20 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].
>
> மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு *அருவருப்பானவன்*; கையோடே கை கோத்தாலும் அவன் தண்டனைக்குத் தப்பான் [நீதி. 16:5 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].
>
> துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு *அருவருப்பானவர்கள்* [நீதி. 17:15 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இப்படிப்பட்ட வேத வசனங்களை நாம் எப்படி தேவன் பாவிகளை நேசிக்கிறார் என்பதோடுகூட ஒப்புரவாக்க முடியும்? தேவன் பாவிகளை அருவருத்து அவர்களை வெறுக்கும் அதே வேளையில், அவர் அவர்களை நேசிக்கிறார் என்றும் எப்படிச் சொல்ல முடியும்.

எல்லா அன்பும் ஒன்றுபோலானதல்ல என்பதையும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். சில அன்பு நிபந்தனையில்லாததாகும். இதை நாம் ''இரக்கமுள்ள அன்பு'' என்று குறிப்பிடலாம். இந்த அன்பு ''இருந்தாலும் நான் உன்னிடம் அன்புகாட்டுகிறேன்'' என்று சொல்லு கிறது. இது மக்கள் என்ன செய்தாலும் அவர்களிடம் அன்புகாட்டுகிறது. இப்படிப்பட்ட அன்பையே தேவன் பாவிகளுக்காகக் கொண்டிருக்கிறார்.

*இரக்கமுள்ள அன்பு* மட்டுமல்ல, *நிபந்தனையோடுகூடிய அன்பும்* இருக்கிறது. இதை ''ஒப்புதலளிக்கும் அன்பு'' என்று குறிப்பிடலாம். இப்படிப்பட்ட அன்பு சம்பாதித்துக்கொள்ளப்பட்டதாகும். இத்தகைய அன்பு ''... இதற்காக நான் உன்னிடம் அன்புகாட்டுகிறேன்'' என்று சொல்லுகிறது.

அன்பானது நிபந்தனைக்குட்பட்டிருக்குமானால் அது அன்பே இல்லை என்று சிலர் நினைக்கிறார்கள். அல்லது அப்படிப்பட்ட அன்பு சுயநலமானது என்று அதைக் குறைகூறுகிறார்கள். அது தேவனுடைய அன்பைப்போல இல்லை என்கிறார்கள்.

நாம் வேதவசனங்களில் பார்க்கப்போகிறபடி தேவன் நிபந்தனைக் குட்பட்ட அன்பையும் கொண்டிருக்கிறார் என்பதே சத்தியமாகும்.

எனவே *ஒப்புதலளிக்கும் அன்பைப்* பரிகாசம்செய்யக்கூடாது. இந்த *ஒப்புதலளிக்கும் அன்பே* தேவன் நமது பிள்ளைகளுக்காகக் கொண்டி ருக்கும் அடிப்படை அன்பாகும். நாம் தேவனுடைய இரக்கமுள்ள அன்பைவிட ஒப்புதலளிக்கும் அன்பையே அதிகமாக வாஞ்சிக்க வேண்டும்.

**ஒப்புதலளிக்கும் அன்பு குறைவான அன்பாகுமா?**

''மக்கள் என்னிடம் *இரக்கமுள்ள அன்பையா* அல்லது *ஒப்புதலளிக்கும் அன்பையா* எதைக் காட்ட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்?'' என்ற கேள்வியை உங்களுக்கு நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். மக்கள் உங்களை ஒப்புதலளிக்கும் அன்பினால் நேசிக்க வேண்டும் என்றே நீங்கள் விரும்புவீர்கள் என்று நான் நினைக்கிறேன்.

உங்களுடைய மனைவியோ அல்லது கணவனோ உங்களிடம் ''உன்னிடம் அன்புகாட்ட எந்தக் காரணமும் கிடையாது. எனது தயவை உன்னிடம் காட்டும்படி தூண்டுதலளிக்க உன்னிடம் எதுவும் காணப்பட வில்லை'' என்று சொல்லுவதையா அல்லது ''பல காரணங்களுக்காக நான் உன்னிடம் அன்புகாட்டுகிறேன். உன்னிடம் நான் பாராட்டக் கூடிய பல காரியங்கள் காணப்படுகின்றன'' என்று சொல்லுவதையா எதைச் சொல்லுவதை நீங்கள் விரும்புகிறீர்கள்? நமது வாழ்க்கைத் துணை நம்மை *ஒப்புதலளிக்கும் அன்போடு* நேசிக்க வேண்டும் என்றே நாம் நிச்சயமாக விரும்புவோம். இப்படிப்பட்ட அடிப்படை அன்பே தம்பதியரை ஒன்றாக இழுத்து, ஒன்றாகச் சேர்த்து வைத்திருக்கிறது. மனைவியிடமோ அல்லது கணவனிடமோ பாராட்டக்கூடிய எதுவும் இல்லாமல் போகும்போது, *ஒப்புதலளிக்கும் அன்பு* இல்லாமல்போகும் போது, ஒருசில திருமண உறவுகளே நிலைத்திருக்கின்றன. அப்படி அது நிலைத்திருந்தாலும் அதற்கு இரக்கமுள்ள அன்பே காரணமாகும். பயபக்தியுள்ளவர் இந்த அன்பை மற்றவருக்குக் கொடுக்கிறார்.

இப்படியிருக்கிறபோது, *ஒப்புதலளிக்கும்* அல்லது *நிபந்தனை யோடுகூடிய* அன்பு குறைவான அன்பு அல்ல என்பதை நாம் காண்கிறோம். *இரக்கமுள்ள அன்பே கொடுப்பதற்கு* மேன்மையான அன்பாக இருக்கும் வேளையில், *ஒப்புதலளிக்கும் அன்பே பெறுவதற்கு* மேலான அன்பாக இருக்கிறது. *ஒப்புதலளிக்கும் அன்பே* பிதாவானவர் இயேசுவின்மீது கொண்டிருக்கும் அன்பு என்ற உண்மையை அறியும்போது, இந்த அன்பு அதற்குரிய மரியாதைக்குரிய இடத்தை எட்டுகிறது. பிதாவாகிய தேவன் இயேசுவின்மீது ஒருபோதும் *இரக்கமுள்ள அன்பைக்* காட்டவில்லை. ஏனென்றால் கிறிஸ்துவில் ஒருபோதும் விரும்பத்தகாத எதுவும் காணப்படவில்லை. இயேசுவானவர் இப்படிச் சாட்சியாகச் சொல்லியிருக்கிறார்:

> நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு, *அதைக் கொடுக்கிறபடியினால்*





> *பிதா என்னில் அன்பாயிருக்கிறார்* [யோவான் 10:17 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இயேசுவானவர் மரிக்குமளவுக்குக் கீழ்ப்படிகிறவராக *இருக்கிற படியால்* பிதாவானவர் இயேசுவிடம் அன்புகாட்டினார் என்பதை நாம் பார்க்கிறோம். *ஒப்புதலளிக்கும் அன்பில்* தவறான காரியம் எதுவும் கிடையாது, எல்லாம் சரியாகவே இருக்கிறது. இயேசுவானவர் தமது பிதா வானவரின் அன்பைச் சம்பாதித்து, அதற்குத் தகுதியுள்ளவராக இருந்தார்.

தாம் தமது பிதாவானவரின் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற படியால் பிதாவின் அன்பில் நிலைத்திருப்பதாகவும் இயேசு சொல்லி யிருக்கிறார்:

> பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். *நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல*, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள் [யோவான் 15:9—10].

மேலும், இந்த வசனம் சொல்லுகிறதுபோல நாம் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி, அவருடைய கட்டளைகளைக் கைக் கொண்டு, அவருடைய அன்பிலே நிலைத்திருக்க வேண்டும். இந்தப் பகுதியில் அவர் *ஒப்புதலளிக்கும் அன்பைக்* குறித்தே பேசுகிறார் என்பது தெளிவாக இருக்கிறது. நாம் அவருடைய அன்பைச் சம்பாதிக்க முடியும், சம்பாதிக்க வேண்டும் என்று அவர் சொல்லுகிறார். அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும்போது நாம் அவருடைய அன்பைவிட்டு நம்மை விலக்கிக்கொள்ளுகிறோம். *நாம் அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டால் மட்டுமே அவருடைய அன்பில் நிலைத்திருக்கிறோம்*. இப்படிப்பட்ட காரியங்கள் இப்போது அபூர்வமாகவே போதிக்கப்படுகின்றன. ஆனால் இயேசு கூறியதின் அர்த்தம் இதுவாக இருக்கிறபடியால் இது போதிக்கப்பட வேண்டும்.

இயேசுவானவர் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறவர் களுக்குத் தேவனுடைய *ஒப்புதலளிக்கும் அன்பை* உறுதிப்படுத்தினார்:

> *நீங்கள் என்னைச் சிநேகித்து*, நான் தேவனிடத் திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிற படியினால் *பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார்* [யோவான் 16:27 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].
>
> என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக் கிறான், *என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என்*

> *பிதாவுக்கு அன்பாயிருப்பான்*; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்து வேன் ... *ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்*; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம் [யோவான் 14:21, 23 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இரண்டாவது மேற்கோளில், ஒப்படைப்பில்லாத விசுவாசிகள் தமது வார்த்தைகளைக் கைக்கொள்ளத் துவங்கினால் அவர்களைச் சிறப்பான வகையில் தம்மிடம் இழுத்துக்கொள்ளுவதாக இயேசுவானவர் வாக்குத் தத்தம் பண்ணவில்லை. எவராவது தம்மை நேசித்து, தமது வார்த்தையைக் கைக்கொள்ளத் துவங்குவார் என்றால், பிதாவானவர் அந்த நபரிடம் அன்புகாட்டுவார் என்றும், தாமும் தமது பிதாவானவரும் அவனிடத்தில் வந்து அவனோடு வாசம்பண்ணுவோம் என்றும் இயேசு வானவர் வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார். இது மறுபடியும் பிறப்பதையே குறிப்பிடுகிறது என்பது தெளிவாகிறது. மறுபடியும் பிறந்த எவருக்குள்ளும் உள்ளே வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் மூலமாகப் பிதாவானவரும் குமாரனும் ஜீவிக்கிறார்கள் [பார்க்க, ரோமர் 8:9]. எனவே மெய்யாகவே மறுபடியும் பிறந்தவர்கள் மனந்திரும்பி, இயேசுவுக்குக் கீழ்ப்படியத் துவங்கியிருப்பவர்கள் என்றும், இவர்கள் மட்டுமே பிதாவானவரின் *ஒப்புதலளிக்கும் அன்பைப்* பெற்றுக்கொள்ளு கிறார்கள் என்றும் அறிகிறோம்.

தம்மில் விசுவாசம் வைப்பவர்களுக்காக இயேசு *இரக்கமுள்ள அன்பையும்* வைத்திருக்கிறார் என்பதும் உண்மைதான். அவர்கள் கீழ்ப்படியாமல் போகும்போது, அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கை யிட்டு, மற்றவர்களை மன்னிப்பார்களென்றால், அவர்களை மன்னிக்க அவர் ஆயத்தமாக இருக்கிறார்.

### முடிவுரை

தேவன் தமது பிள்ளைகளிடம் காட்டும் அதே அன்பைப் பாவிகளிடம் காட்டுவதில்லை என்பதை வலியுறுத்தவே இவையெல்லாம் சொல்லப்படிருக்கின்றன. அவர் பாவிகளை *இரக்கமுள்ள அன்பினால்* மட்டுமே நேசிக்கிறார், இந்த அன்பு தாற்காலிகமானதாகும், அவர்கள் மரிக்கும் வரையிலேயே இது நீடித்திருக்கிறது. அவர் அவர்களை *இரக்கமுள்ள அன்பைக்* கொண்டு நேசிக்கும் அதே வேளையில், அவர்களுடைய நடத்தையை அவர் ஒப்புக்கொள்ளாதபடியால் அவர்களை வெறுக்கிறார். வேதவசனம் இதையே போதிக்கிறது.

இதே வேளையில், தேவன் மறுபடியும் பிறவாதவர்களை நேசிப்பதைவிடத் தமது பிள்ளைகளை அதிகமாக நேசிக்கிறார். அவர்கள்





மனந்திரும்பி, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள முயலுகிற படியால் அடிப்படையில் *ஒப்புதலளிக்கும் அன்பினால்* அவர்களை நேசிக்கிறார். அவர்கள் பரிசுத்தத்தில் வளரும்போது, *இரக்கமுள்ள அன்பைக்* கொண்டு அவர்களை நேசிக்க வேண்டிய காரணம் குறைகிறது. அவர்கள் விரும்புகிறபடி *ஒப்புதலளிக்கும் அன்பினால்* அவர்களை நேசிப்பதற்கான காரணம் அதிகரிக்கிறது.

தேவனுடைய அன்பைக் குறித்துப் பல நவீன காலப் பிரசங்கிமார் மற்றும் போதகர்களின் போதனை சரியில்லாததாகவும், தவறாக வழிநடத்துவதாகவும் இருக்கிறது. வேதவசனங்களின் அடிப்படையில் கீழே தேவனுடைய அன்பைக் குறித்துக் கூறப்படும் பிரபலமான வாசகங்களைச் சீர்தூக்கிப் பாருங்கள்:

1] இப்போது தேவன் உங்களை நேசிப்பதைவிடக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ உங்களை நேசிக்கும்படி நீங்கள் எதையும் செய்ய முடியாது.

2] தேவன் உங்களிடம் காட்டும் அன்பை நிறுத்தும்படி நீங்கள் எதையும் செய்ய முடியாது.

3] தேவனுடைய அன்பு நிபந்தனையில்லாதது.

4] தேவன் எல்லோரிடமும் ஒன்றுபோல அன்புகாட்டுகிறார்.

5] தேவன் பாவியை நேசிக்கிறார், ஆனால் பாவத்தை வெறுக்கிறார்.

6] தேவனுடைய அன்பைச் சம்பாதித்துக்கொள்ளவோ, அதற்குத் தகுதிபெறவோ உங்களால் எதையும் செய்ய முடியாது.

7] நம்மீது தேவன் காட்டும் அன்பு நாம் செய்வதை அடிப்படை யாகக் கொண்டது அல்ல.

மேலேயுள்ள வாசகங்கள் எல்லாமே பொய்யாகவும், தவறாக வழிநடத்துபவையாகவும் இருக்கின்றன. பெரும்பாலான வாசகங்கள் தேவனுடைய *ஒப்புதலளிக்கும் அன்பை* மறுக்கின்றன, அவருடைய *இரக்கமுள்ள அன்பைக்*குறித்துத் தவறாகச் சொல்லுகின்றன.

முதலாவது வாசகத்தைப் பொருத்தவரையில், விசுவாசிகள் செய்யக்கூடிய ஒன்று தேவன் அவர்களை அதிகமாக *ஒப்புதலளிக்கும் அன்பினால்* நேசிக்கும்படி செய்யக் கூடியதாகும்: அவர்கள் இன்னுமதிக மாகக் கீழ்ப்படிதலுள்ளவர்களாக ஆகலாம். தேவன் அவர்களை குறைவான *ஒப்புதலளிக்கும் அன்பினால்* நேசிக்கும்படி செய்யும் ஒன்றும் உண்டு: கீழ்ப்படியாமை. பாவிகளைக் குறித்த வரையில் தேவன் அவர்களிடம் அதிகமாக அன்புகாட்டும்படி அவர்களால் ஒன்றைச் செய்ய முடியும்: மனந்திரும்புதல். அப்போது அவர்களால் தேவனுடைய *ஒப்புதலளிக்கும் அன்பைப்* பெற்றுக்கொள்ள முடியும். அவர்கள் தேவனுடைய அன்பை இழந்துபோகும்படி செய்யும் ஒரே காரியம்: மரித்தல். அப்போது அவர்கள் தேவன் அவர்கள்மீது கொண்டிருந்த ஒரே அன்பாகிய *இரக்கமுள்ள அன்பையும்* இழந்துபோகிறார்கள்.

இரண்டாவது வாசகத்தைப் பொருத்தவரையில், ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்வதற்குத் திரும்புவதின்மூலம் தேவனுடைய *ஒப்புதலளிக்கும் அன்பை* இழந்துபோகலாம். அப்போது அவன் தேவனுடைய *இரக்கமுள்ள அன்பை* மட்டுமே அனுபவிக்கக் கூடியவனாக ஆகிறான். ஒரு அவிசுவாசி மரித்துப்போனால், தேவன் அவன்மீது கொண்டிருந்த ஒரே அன்பாகிய *இரக்கமுள்ள அன்பை* இழந்துபோகலாம்.

மூன்றாவது வாசகத்தைப் பொருத்தவரையில், தேவனுடைய *ஒப்புதலளிக்கும் அன்பு* நிபந்தனைக்கு உட்பட்டதாகும். அவருடைய *இரக்கமுள்ள அன்பும்* ஒருவன் சரீரப்பிரகாரமாக உயிரோடிருக்கும் வரை மட்டுமே காட்டப்படுவதால் அதுவும் நிபந்தனைக்கு உட்பட்டதாகும். மரணத்துக்குப் பின்னர் தேவனுடைய *இரக்கமுள்ள அன்பு* காட்டப்படாத படியால் அது தாற்காலிகமானது, எனவே நிபந்தனைக்குட்பட்டது.

நான்காவதாக, தேவன் எல்லோரிடமும் எல்லா வேளைகளிலும் ஒரே அன்பைக் காட்டுவதில்லை. பரிசுத்தவான்களானாலும் சரி, பாவிகளானாலும் சரி, வெவ்வேறு அளவுகளில் அவர் ஒப்புதலளிக்கிறார், ஒப்புதலளிக்காமல் இருக்கிறார். பாவிகளுக்கும், பரிசுத்தவான்களுக்கும் காட்டப்படும் அன்பு ஒன்றுபோலானது அல்ல என்பது உண்மையாகும்.

ஐந்தாவதாக, தேவன் பாவிகளையும் அவர்களின் பாவங்களையும் வெறுக்கிறார். அவர் பாவிகளை *இரக்கமுள்ள அன்பினால்* நேசிக்கிறார், அவர்களுடைய பாவங்களை வெறுக்கிறார். அவருடைய *ஒப்புதலளிக்கும் அன்பின்* அடிப்படையில் அவர் அவர்களை வெறுக்கிறார்.

ஆறாவதாக, எவரும் தேவனுடைய *ஒப்புதலளிக்கும் அன்பைச்* சம்பாதித்துக்கொள்ள முடியும், சம்பாதித்துக்கொள்ள வேண்டும். அவருடைய *இரக்கமுள்ள அன்பு* நிபந்தனையில்லாததினால் அதை எவராலும் சம்பாதித்துக்கொள்ள முடியாது.

ஏழாவதாக, தேவனுடைய *இரக்கமுள்ள அன்பு* கிரியைகளைச் சார்ந்திருக்கவில்லை, ஆனால் *ஒப்புதலளிக்கும் அன்பு* செயல்களைச் சார்ந்திருக்கிறது.

சீஷர்களை உருவாக்கும் ஊழியர் எவரும் ஏமாற்றப்படுவதை விரும்பாதபடியால், வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளபடி, தேவனுடைய அன்பைக் குறித்துச் சரியாகப் பிரசங்கிக்க வேண்டும். தேவனால் *ஒப்புதலளிக்கும் அன்போடு* நேசிக்கப்படுபவர்கள் மட்டுமே பரலோகத்துக்குச் செல்ல முடியும். மறுபடியும் பிறந்து, இயேசுவுக்குக் கீழ்ப்படிகிறவர்களை மட்டுமே தேவன் *ஒப்புதலளிக்கும் அன்பினால்* நேசிக்கிறார். மக்களைப் பரிசுத்தத்தை விட்டு விலகச் செய்யும் எதையும் சீஷர்களை உருவாக்கும் ஊழியர் போதிக்கக் கூடாது. கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும் சீஷர்களை உருவாக்க வேண்டும் என்பதே அவருடைய இலக்காகும்.



# 7

# வேதாகமத்துக்கு அர்த்தம்காணுதல்

பவுல் தீமோத்தேயுவுக்கு இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> *உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும்* எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய் [1 தீமோ. 4:16 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

எல்லா ஊழியரும் இந்த எச்சரிப்பை மனதில் ஏற்றுக்கொள்ள வேண்டும். முதலில் *தன்மீது* அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும். தான் தேவனுக்கடுத்த முன்மாதிரியாக இருக்கிறேனா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, அவர் தனது போதனையைக் குறித்து அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், பவுல் மேலேயுள்ள வசனத்தில் குறிப்பிட்டதுபோல, அவருடைய சொந்த இரட்சிப்பும் அவருடைய பேச்சைக் கேட்பவர்களின் இரட்சிப்பும் அவர் எதைப் போதிக்கிறாரோ அதைச் சார்ந்திருக்கிறது.[29] ஒரு ஊழியர் தவறான கோட்பாட்டை ஏற்றுக்கொண்டாலோ அல்லது மக்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுவதைப் புறக்கணித்தாலோ அது அவருக்கும் மற்றவர்களுக்கும் நித்திய அழிவைக் கொண்டுவரும்.

சீஷரை உருவாக்கும் ஊழியர் பொய்யான உபதேசத்தைப் போதிப்பதைக் குறித்துச் சாக்குப்போக்குச் சொல்ல முடியாது. ஏனென்றால் அவரைச் சத்தியத்துக்குள் வழிநடத்த தேவன் தமது

[29] பவுல் நிபந்தனையில்லாத நித்திய பாதுகாப்பில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகிறது. இல்லாவிட்டால், இரட்சிக்கப்பட்ட நபராகிய தீமோத்தேயுவிடம் தனது இரட்சிப்பைக் காப்பாற்றிக்கொள்ள அவர் எதையாவது செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்லியிருக்க மாட்டார்.